# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 - 26490183. Cell :9444701953

*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை - 600 056.*

## இந்தப் பொல்லாத, விபசாரச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்.

(மத். 12 : 39, 16 : 4. மாற். 8 : 38. அப். 2 : 40)

**வருகின்ற புதிய ஆண்டு 2011 ஐ சமாதானத்தின் தேவன் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதங்களினாலே உங்களை ஆசீர்வதித்து, உங்களது ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காத்திடுவாராக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே 2011 ஆம் ஆண்டு முழுவதும் இருப்பதாக. ஆமென்**

**1.** ஒரு பக்கம் தங்களை கிறிஸ்தவன், கிறிஸ்தவள், பெந்தெகொஸ்தேகாரன், கிறிஸ்துவின் மணவாட்டி என அழைத்துக்கொண்டு, தங்கள் வாயினால் கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் அவரை கனம் பண்ணி, அவரை தங்கள் ஆத்தும நேசர், மணவாளன் என கூறி அவர் மீது உரிமை பாராட்டுகிறார்கள்.

**2.** மறுபக்கம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன் எவனோ அவன், அவருடைய நாமம் அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்பை பெறுவான் என்ற தீர்க்கதரிசிகளின் சாட்சியை புறக்கணித்து ; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்ற ஆரோக்கியமான போதனையை நிராகரித்து ; தங்கள் அக்கிரமங்களுக்கும், மீறுதல்களுக்கும், அவிசுவாசத்திற்கும் மனந்திரும்பி, தங்கள் பாவ மன்னிப்புக் கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறாது, அந்த ஞானஸ்நானத்தின் வாயிலாக கிறிஸ்துவை தரித்துக் கொள்ளாது தங்கள் இருதயத்தை கடினப்படுத்துகிறார்கள். ஏனென்றால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற இவர்கள் ஆக்கினைக்குள்ளாகப்படும்படிக்கு இவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்க கொடிய வஞ்சகத்தை தேவன் இவர்களுக்குள்ளே அனுப்பியுள்ளார்.

**3.** மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கபட்டவர்களையே கர்த்தர் அநுதினமும் தம்முடைய சரீரமாகிய சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அதோடு மட்டுமல்ல ஒருவனுடைய மனந்திரும்புதல், ஞானஸ்நானம், பாவமன்னிப்பு, இரட்சிப்பு, சபையில் அங்கமாகுதல் போன்ற காரியங்களை வேதவாக்கியங்களில் நன்கு தியானித்தும், அவைகளை அசட்டை பண்ணி, புறம்பே தள்ளி, ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு மாறாக செயல்பட்டு, பிசாசின் கரங்களில் இருந்து இயங்கிவரும் ஸ்தாபன சபைகளில், பலவிதமான பேர் பலகைகளின் கீழ் ஆங்காங்கு மூலைமுடுக்குகளின் காணப்படும் தனியார் கூடும் விடுதிகளில் விபசார மார்க்கமாய் ஐக்கியம் கொண்டுள்ளார்கள். இவர்கள் சுவிசேஷத்தை கேட்டார்கள். ஆனால் அதை விசுவாசமில்லாமல் கேட்டார்கள். ஆதலால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை.

**4.** ஸ்தாபன சபைகளில் போதிக்கப்படும் மனுஷர்களுடைய கற்பனைகளை உபதேசங்களாக கொண்டு இந்த உலகத்திலும், இந்த உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூர்ந்து, நேசித்து, தேவனுக்கு வீணாய் ஆராதனை செய்கிறார்கள். இந்த பேர்கிறிஸ்தவ மக்களை தான் வேதவாக்கியமானது விபசாரச்சந்ததி என்று அழைக்கிறது. ஏனென்றால் இவர்கள் ஒரு பக்கம் கிறிஸ்து மீதும், மறுபக்கம் இந்த உலகத்தின் மீதும், ஸ்தாபன சபைகள் மீதும் அன்பு கூர்ந்து, நேசித்து, அதன்மீதும் உரிமை கொண்டாடுகிறார்கள். ஒரே நேரத்தில் இரு புருஷர்கள் மீது உரிமை கொண்டாடுகிறார்கள்.

**5. ஆதலால் இந்த பொல்லாத, விபசாரமும், பாவமும், பொல்லாப்பும், மாறுபாடுமுள்ள சந்ததியை விட்டு, விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் இந்த நிருபத்தின் / செய்தி தொகுப்பின் மூலம் உங்களை அழைக்கிறேன்.**

**6. ஏசாவை போல் ஒரு கையில் உலகத்தை பிடித்துக்கொண்டும், இன்னொரு கையில் தேவனையும் பற்றிக்கொள்ள முயற்ச்சிக்காதீர்கள். அப்படி நீங்கள் செய்ய முடியாது. காகத்தை போன்று சுத்தமான பொருளையும், அசுத்தமான பொருளையும் உணவாக்கிக் கொள்ள ஆசைப்படாதீர்கள். அது புறாவிற்கு ஜீரணிக்காது. நீங்கள் மாறுகண் உள்ள கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. ஒரே வேளையில் தேவனையும் நோக்கிக்கொண்டு, அதே வேளையில் உலகத்தையும் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. உங்கள் முழு பார்வையும் கல்வாரியின் மேல் தான் மையம் கொண்டிருக்கவேண்டும். இது தான் இந்த நிருப்பம் மூலமாக இந்த புதிய ஆண்டில் நான் உங்களுக்கு கொடுக்கும் தெய்வீக ஆலோசனை. இந்த ஆரோக்கியமான ஆலோசனையை / அழைப்பை ஏற்றுக்கொள்வது, நிராகரிப்பது உங்கள் சுயாதீனம்.**

**7. வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறபடியினால், அவைகளைக்கொண்டு உங்கள் நடத்தைகளை நீங்களே நிதானித்துப்பார்க்க ; நீங்கள் சார்ந்துள்ள சபை அல்ல, ஊழியக்காரர்கள் அல்ல மாறாக பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, சத்திய ஆவியாகிய அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் இந்த புதிய ஆண்டில் வழிநடத்துவாராக. ஆமென்.**

**8. உங்கள் ஆத்துமாவிற்கு பிரயோஜனமாய் இருக்க வேண்டியவைகளை உங்களுக்கு போதித்து, நீங்கள் நடக்க வேண்டிய வழிகளிலே உங்களை நடத்தவேண்டிய ஒரு உக்கிராணப் பொறுப்பு என் மீது இருக்கிறது. ஏனென்றால் நான் அதற்கென்று அழைக்கப்பட்டவன். தேவன் எனக்கு அளித்த கிருபையினால் நான் இவைகளை அதிக தைரியமாய் எழுதுகிறேன்.**

---

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா ஆகிய நான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும், தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதிகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. கடந்த பல மாதங்களாக நான் எந்த விதமான செய்தியுடனும் உங்களோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. காரணங்கள் பல. அவற்றில் ஒன்று பொருளாதார நெருக்கடி மற்றொன்று எந்த செய்தியை எழுதுவது என்று ஆவியானவரின் வழிநடத்துதல் கிடைக்கவில்லை. **ஆயிரம் வருட அரசாட்சி** குறித்து எழுத முயற்சித்தேன். அது தடைப்பட்டது. பின் **பூமியின் இருதயத்தில் மனுஷகுமாரன் 3 நாட்கள் இரவும் பகலும்** இருந்தது குறித்து எழுத ஆரம்பித்தேன். ஆவியானவருடைய முழு வழிநடத்துதல் கிடைக்கவில்லை. **தெய்வீக சுகம்** முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. முடிவாக இந்த செய்தி தொகுப்பை எழுத ஆரம்பித்தேன். ஆவியானவரின் வழிநடத்துதலின்படி எழுதியும் முடித்தேன். இது இப்பொழுது உங்கள் கரங்களில் தவழ்கிறது. கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

3. **ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாளின் கர்ப்பத்தில் பொல்லாங்கனாகிய சாத்தானின் வித்து** என்ற இதழ் ஸ்தாபன சபைகளை சார்ந்த மக்கள் மத்தியில் வரவேற்பை கண்டது. ஆதலால் இரண்டாது ஒரு பதிப்பு வெளியிட்டேன். மீண்டும் ஒரு பதிப்பு அதாவது மூன்றாவது ஒரு பதிப்பும் தேவைப்படுகிறது. அதற்காகவும் ஆயத்தப்பட்டு வருகிறேன்.

4. இப்பொழுது மேற்கண்ட தலைப்புக்கு ஏற்ற செய்திக்காக நான் தெரிந்துக்கொண்ட வேதவாக்கியங்கள் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபம் 7 வது அதிகாரம் 1-6 வசனங்களில் அடங்கியிருக்கிறது.

அ. நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன்: சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா?

ஆ. அதெப்படியெனில், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்.

இ. ஆகையால் புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபசாரி எனப்படுவாள் : புருஷன் மரித்த பின்பு அவள் அந்த பிரமாணத்தினின்று விடுதலையானபடியால் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரி அல்ல.
ஈ. அப்படிபோல, என் சகோதரரே நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிக்கொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களானீர்கள்.
உ. நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவாக கனிகளை கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது.
ஊ. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்யத்தக்கதாக, நம்மை கட்டியிருந்த நியாயப்பிரமாணத்திற்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

5. அப்போஸ்தலனாகிய பவுல், இங்கு எழுதப்பட்ட பிரமாணத்தை சபையை ஒழுங்குப்படுத்த ஒரு எடுத்துக்காட்டாக கையாளுகிறான். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஒழுங்குப்படுத்துவதில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பெரும் பங்கு உண்டு. நியாயப்பிரமாணத்தின்படி ஒரு புருஷனுக்கும், ஸ்திரீக்கும் உள்ள ஒழுங்கு முறையை ஒரு திருஷ்டாந்தமாக கொண்டு பவுல் புதிய ஏற்பாடு சபையை ஒழுங்குப்படுத்துகிறான். பாருங்கள் சபையாகிய நாம் ஒரே நேரத்தில் கிறிஸ்துவையும், உலகத்தையும் விவாகம் செய்துகொண்டால் அது சட்டபூர்வமாகாது. அது ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்கையில் வேறொருவனுக்கு வாழ்க்கைப்படுவதற்கு சமானம் என்று விவரிக்கிறான். ஸ்திரீ எப்பொழுதுமே சபைக்கு உதாரணமாக இருக்கிறாள். ஏனென்றால் சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக கருதப்படுகிறது. நாம் ஸ்திரீகளின் நடத்தைகளை கொண்டு சபை எந்நிலையில் உள்ளது என்பதை கண்டுக்கொள்ளலாம். அவ்வண்ணமாகவே அரசியல் நிலையைக் கொண்டும் சபை எந்த நிலையில் உள்ளது என்பதை நிதானிக்க முடியும். அரசியல் தலைவர்களுக்கும் சபை தலைவர்களுக்கும் நிறயை ஒற்றுமை உண்டு. அரசியல் தலைவர்கள் மக்களை ஏமாற்றி நாட்டை கொள்ளையடிக்கிறார்கள். சபை தலைவர்கள் விசுவாசிகளை ஏமாற்றி சபையை கொள்ளையடிக்கிறார்கள். அரசியல் தலைவர்கள் மக்களுக்கு சேவை என்ற போர்வையின் கீழ் தங்கள் வாரிசுகளுக்கு, குடும்பங்களுக்கும் (இதில் பெரிது, சிறிது அடங்கும்) உற்றார் உறவினர்களுக்கும் சேவை செய்கிறார்கள். அதே விதமாகதான் சபை தலைவர்களும் சேவை செய்கிறார்கள். முடிவில் ஏமாளிகள் யார்? நாட்டு மக்களும் சபை விசுவாசிகளும் தான்.

6. இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களுடனே பேசுகிறேன் என்கிறான். அவ்வண்ணமாகவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக எற்படுத்தபட்ட காலேப் யோசுவா ஆகிய நான் : நாங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்திருக்கிறோம், அவர் எங்கள் பாவங்களுக்காக பாடுபட்டார், மரித்தார், அடக்கம் பண்ணபட்டார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறோம் : விசுவாசமுள்ளவனாகி பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று உச்சரித்தோ அல்லது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலோ, எப்படியோ ஒரு ஞானஸ்நானம் பெற்றுள்ளோம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுள்ளோம், கர்த்தருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறோம், சபை பக்தி விருத்திக்கான ஐந்து வகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தையோ அல்லது அனைத்து ஊழியத்தையும் ஒரு நபராக செய்கிறோம், அந்நிய பாஷைகளை பேசுகிறோம். வியாதியஸ்தர்களை குணமாக்குகிறோம், பிசாசுகளை துரத்துகிறோம், குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணுகிறோம், தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறோம், பள்ளிகளையும் கல்லூரிகளையும் மருத்துவமனைகளையும் கட்டுகிறோம், இந்தியா மட்டுமல்ல உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறோம் என பலவகையில் தங்களை பெருமைப்படுத்தி பேசும் மக்களிடத்தில் பேசுகிறேன். அதோடு மட்டுமல்ல நாங்கள் லவோதிக்கேயா சபை காலதூதனுடைய செய்தியை கேட்டு, அதை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து கனிக்கொடுக்கிறவர்களாய் இருக்கிறோம். இன்னும் புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகைகளாக கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறோம் என வீண் வாய் பேச்சு பேசும் மக்களுடனும் இந்த நிருபம் மூலமாக பேசுகிறேன்.

7. கர்த்தருடைய வசனமானது : நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, சந்தோஷப்பட்டு, அதை மகிமைப்படுத்தினார்கள் எனவும் (அப் 13 : 48) திருவசனத்திற்கு கீழ்ப்படியாமல் இருந்து இடறுகிறவர்கள், அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள் எனவும் (1 பேதுரு 2 : 8) கூறுகிறது. ஆதலால் வேதவாக்கியங்களைக் கொண்டு நான் எழுதும் காரியங்களை விசுவாசித்து கீழ்ப்படிவதும், கீழ்ப்படியாமலிருந்து இடறுவதும் உங்களுக்கடுத்த காரியமாய் இருக்கிறது. நடுகிறதும், நீர் பாய்ச்சுகிறதும் எனக்கடுத்ததாயிருக்கிறது. ஆனால் நடுகிறவனாலும், நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. விளையச்செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும். (1கொரி 3 : 6,7)

8. **நியாயப்பிரமாணம்** - Law - சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு காரியத்தை குறித்ததான ஒழுங்குமுறைக்கடுத்த சட்டங்களை (Rules of Conduct) கொண்டது. ஆக பவுல் இந்த சட்டத்திட்டங்களை நன்கு அறிந்தவர்களுடனே பேசுகிறான். அவ்வண்ணமாகவே நானும் வேதவாக்கியங்களை நன்கு அறிந்திருக்கும் வேதபண்டிதர்களுடனே, போதகர்களுடனே, விசுவாசிகளுடனே பேசுகிறேன். ஆனால் என்னால் ஒன்றுமில்லை. அவர் என்னை இயங்கச்செய்கிறார். நான் செயல்படுகிறேன்.

9. **நியாயப்பிரமாணத்தை கொடுத்தவர் யார்?** கர்த்தர் நியாயப்பிரமாணிகர் ஏசா 33 : 22 - Lord is our Law giver இந்த நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளது (ரோ 7 : 12. - Law is Holy One) அதோடு மட்டுமல்ல நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாகவும் இருக்கிறது. (ரோ 7 : 14 - Law is spiritual) கர்த்தருடைய வேதம் (நியாயப்பிரமாணம்) குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாய் இருக்கிறது. (சங் 19 : 7 - The Law of the Lord is perfect, converting the soul) ஆதலால் கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற (நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிற) உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் (சங் 119 : 1 - Blessed are who walk in the Law of the Lord) சாலொமோன் கர்த்தருடைய வேதம் (நியாயப்பிரமாணம்) என் மனமகிழ்ச்சி என கூறுகிறான் (சங் 119 : 174 . Oh Lord thy Law is my delight)

10. மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி, அதை கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை சுமக்கிற லேவி புத்திரரான ஆசாரியருக்கும், இஸ்ரவேலருடைய மூப்பர் எல்லாருக்கும் ஒப்புவித்து அவர்களுக்கு கட்டளையிட்டது என்னவென்றால் : விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடார பண்டிகையில் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துக்கொள்ளும் ஸ்தலத்தில் இஸ்ரவேலர் எல்லாரும் அவருடைய சந்நிதியில் சேர்ந்து வந்திருக்கும் போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேல் எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய். புருஷர்களும் ஸ்திரீகளும், பிள்ளைகளும், உன் வாசல்களில் இருக்கும் அந்நியர்களும் கேட்டுக்கற்றுக்கொண்டு உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்கும்படிக்கும், அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானை கடந்து சுதந்தரிக்கபோகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயப்படக்கற்றுக்கொள்ளும்படிக்கும், ஜனத்தைக் கூட்டி அதை வாசிக்க வேண்டும் என்றார் (உபா 31 : 9-13) நீங்கள் யாத் 20 அதி, 21 அதி, லேவி 1 அதி மற்றும் எண். 3 அதி களை தியானித்தால் மோசே நியாயப்பிரமாணத்தை பெற்றான் எனவும் அவைகள் ஒரு புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டு உடன்படிக்கை பெட்டியின் அருகில் வைக்கப்பட்டது (உபா 31 : 24 - 26). எனக் காணலாம். இன்று கர்த்தருடைய கற்பனைகளையும் பிரமாணங்களையும் கொண்ட புத்தகம் **பரிசுத்த வேதாகமம்** என்று அழைக்கப்பட்டு புத்தக வடிவில் உங்கள் கரங்களில் இருக்கிறது. அதை தியானித்து அதன்படி நடக்க வேண்டியது உங்கள் அனைவருடைய கடமையாகயிருக்கிறது.

11. **நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?** பாவத்தை அறிகிற அறிவு ஒருவனுக்கு நியாயப்பிரமாணத்தினாலே வருகிறது. (ரோ 3 : 20 - Law is the knowledge of sin.) பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறியவந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை. இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிராணம் சொல்லாதிருந்தால் இச்சை பாவம் என்று நான் அறியாமல் இருப்பேனே (ரோ 7 : 7) ஆக ஒருவன் பாவம் செய்யாதபடி அவனை தடைசெய்வதே நியாயப்பிரமாணத்தின் நோக்கம். பாருங்கள், நியாயப்பிரமாணத்தின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான் (ரோ 10 : 5) அதே வேளையில் நியாயப்பிரமாணம் விசுவாசத்திற்குரியதல்ல. அவைகளை செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான் (கலா 3 : 12).

12. மேலும் இந்த நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதியிருக்கிற தேவனாகிய கர்த்தருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவதே நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்பு கூறுவதாகும் (உபா 30 : 10, மாற் 12 : 30)

13. நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடக்காதவன் சபிக்கபட்டவன் (உபா 17 : 26) நியாயப்பிரமாணத்தின் கிரியைகாரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள். நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனே அவன் சபிக்கப்பட்டவன் (கலா 3 : 10).

14. நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்பட்டது அல்ல (1 தீமோ 1 : 9 - 11) அதே வேளையில் எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள் (ரோ 3 : 23) பாருங்கள் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை (ரோ 3 : 20).

15. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்தில் இருந்தது. நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம், பாவம் எனப்படமாட்டாது. அப்படியிருந்தும் மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவம் செய்யாதவர்களையும் ஆண்டுக்கொண்டது (ரோ 5 : 13, 14)

16. ஆதாம் தேவனிடமிருந்து கட்டளை பெற்றான். நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நம்மை தீமை அறியதக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம், அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையைப் பெற்றான். ஆனால் அதை மீறினான். இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினால் மரணமும் உலகத்திலே பிரவேசித்தது (ஆதி 2 : 16,17, ரோ 5 : 12).

17. நோவாவும் தேவனிடமிருந்து கட்டளை பெற்றான் (ஆதி 6 : 13-21) தேவன் தனக்கு கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்து முடித்தான் (ஆதி 6 : 22) ஆனாலும் மரணம் அவனையும் ஆண்டுகொண்டது. பாருங்கள் மரணம் கீழ்படியாதவர்களையும், கீழ்படிந்தவர்களையும் ஆண்டுகொண்டது. ஆதாம் உயிரோடிருந்த நாட்களெல்லாம் 930 வருஷம். அவன் மரித்தான் (ஆதி 5 : 5) நோவாவின் நாட்களெல்லாம் 950 வருஷம் அவனும் மரித்தான் (ஆதி 9 : 29). கர்த்தருக்கு ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாள் போலயிருக்கிறது. (2 பேதுரு 3 : 8)

18. இப்பொழுது கவனியுங்கள் : ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதாயிருக்கிறது. உதாரணமாக நாம் இந்த பூமியில், ஒரு நாட்டின் பிரஜையாக ஜீவிக்கும்வரை இந்த நாட்டின் சட்டத்திட்டங்கள் நம்மை ஆளுகிறதாக இருக்கிறது. அதை மீறினால் தண்டனை, சில வேளைகளில் மரணம் கூட உண்டு. மேலும் நாம் ஒரு கம்பெனியில் பணிபுரியலாம். அந்த வேலையில் நாம் அந்த கம்பெனியின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும். அதை மீறினால் வேலையிலிருந்து நீக்கப்படலாம். அது மீறியதற்கு தண்டனையாகும். அவ்வண்ணமாகவே தேவனுடைய ஆட்சிக்குட்பட்ட ஒரு மனிதன் அவன் உயிரோடிருக்குமளவும் அவர் கொடுத்த நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். அது அவனை ஆளுகிறதாக இருக்கிறது. அதை கைக்கொண்டு நடக்காதவன் சபிக்கப்பட்டவன்.

19. இப்பொழுது ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படி அவனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கிறாள். ஏனென்றால் அவள் அவனுடைய சரீரத்தின் பாகமாக இருக்கிறாள். நாமும் கிறிஸ்துவை நமது ஆத்தும நேசர் என அழைத்துக்கொள்ளும்போது அவருடைய சரீரத்தின் பாகமாக இருக்கிறோம். ஆதியில் ஏதேன் தோட்டத்தில் கணவன், மனைவி சரிசம அந்தஸ்துள்ளவர்களாக இருந்தனர். அவள் அவனுக்கு ஒரு ஏற்ற துணையாக இருந்து வந்தாள். ஆனால் ஸ்திரீயின் மீறுதலுக்கு பிறகு தேவன் அவளை நோக்கி : இனி உன் புருஷன் உன்னை ஆண்டுகொள்வான் என்றார். (ஆதி 3 : 16. He shall rule over thee) இனி உன் ஆசை உன் புருஷனையே பற்றியிருக்கும் என்றார் (ஆதி 3 : 16. Thy desire shall be thy husband) இதினிமித்தம் ஸ்திரீக்கு புருஷன் தலையானான் (1 கொரி 11 : 3) மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டியவர்களானார்கள். (எபே 5 : 24. Let the wives be to their own husband in everything) இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக வேதவாக்கியங்களிலிருந்து எண் 30 அதியை நாம் தியானிக்கலாம். ஒரு ஸ்திரீ தன் புருஷன் வீட்டில், கர்த்தருக்கு ஒரு பொருத்தனைப்பண்ணி, தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்துகிறாள். அவன் புருஷன் அதை அறிய வருகிறான். பாருங்கள் அவள் செய்த எந்த பொருத்தனையும், அவளுடைய புருஷன் ஸ்திரப்படுத்தவும் கூடும், செல்லாதபடி பண்ணவும் கூடும். கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார். பாருங்கள் அவள் புருஷனுக்கு அந்த அளவுக்கு அவள் மீது அதிகாரம் உண்டு. அதையும் தேவன் அங்கீகரிக்கிறார். தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலியஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாயிருக்கவேண்டும். (தீத் 2 : 5) மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்ப்படிந்திருங்கள் ( 1 பேதுரு 3 : 1).

20. ஏவாளுடைய கீழ்ப்படியாமையினாலே ஆதாம் ஏவாளை ஆண்டுகொள்ள கர்த்தர் தம்முடைய முதல் பிரமாணத்தை மாற்றியமைத்து, ஸ்திரீக்கு புருஷனை தலையாக்கினார். இன்று அநேக விசுவாசிகளின் இல்லங்களில் ஸ்திரீகளே தங்கள் புருஷர்களை ஆண்டுகொண்டு, ஆளுகை செய்வதை நான் என் கண்களால் காண்கிறேன். ஸ்திரீதன் புருஷனை ஒரு தஞ்சாவூர் பொம்மை மாதிரி ஆடவைக்கிறாள், அவனை பாடவைக்கிறாள், ஆட்டிப்படைக்கிறாள். பெண்களே எல்லா காரியத்திலேயும் முடிவு எடுக்கிறார்கள். இது கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு பெரிய வெட்கக்கேடாக இருக்கிறது. இவர்களது நடத்தைகள் வேதவாக்கியங்களை தாறுமாறாக்குகிறது. பெண்கள் ஆண்களாகவும், ஆண்கள் பெண்களாகவும் நடக்கிறார்கள், உடைஉடுத்துகிறார்கள், பொது ஸ்தலங்களில் பணிபுரிகிறார்கள். இதற்கெல்லாம் மெயின் காரணம் என்ன? பெண்களும், ஆண்களைப்போன்று பொதுஸ்தலங்களுக்கு சென்று பணி செய்து சம்பாத்தியம் பண்ணுகிறதே ஆகும். சில வீடுகளில் பெண்கள் ஆண்களைவிட அதிகம் சம்பாதிக்கிறார்கள்.

புருஷனை தன் காலடியின் கீழ் போட்டு, எங்கள் பகுதிகளில் உப்பு விளையும் நிலங்களில், காலால் அந்த நிலத்தை மிதிப்பது போன்று மிதி, மிதி என மிதிக்கிறார்கள். அநேக சபைகளில் பாஸ்டர் அருகில் அவர்கள் மனைவி நின்றுகொண்டு பாஸ்டருக்கு பதிலாக முடிவு எடுக்கிறார்கள். அவர்கள் சபையை நன்கு கவனித்தால் அங்கு பெண்களின் ஆதிக்கமே அதிகம். ஏனென்றால் மேய்ப்பனுடைய வழி எதுவோ அதுவே சீஷனுடையதும் ஆகும்.

21. இப்பொழுது கவனியுங்கள், ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும், அதாவது அவன் உயிரோடிருக்கும் காலம் வரைக்கும் அவனுடைய பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள். (1கொரி 7:39) ஸ்திரீ தன் புருஷன் மரித்த பின்பு தன் புருஷனைப் பற்றிய பிரமாணத்திலிருந்து விடுதலையாகிறாள் (ரோ 7:2) தன் புருஷன் மரித்த பின்பு, தனக்கு இஷ்டமானவனாகவும், கர்த்தருக்கு உட்பட்டவனாயுமிருக்கிற எவனையும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாகிறாள். (The wife is bound by the law as long as her husband liveth, but if her husband be dead, she is at liberty to be married to whom she will, only in the Lord) பாருங்கள், தன் புருஷன் மரித்த பின்பு அவள் கர்த்தருக்குட்பட்ட எவனையும் விவாகம் செய்யலாம். அவள் ஒரு அவிசுவாசியை, ஒரு பாவனை விசுவாசியை, ஒரு விக்கிரகாராதனைக்காரனை திருமணம் செய்யக்கூடாது. ஏனென்றால் உன் மிருக ஜீவன்களை வேறுஜாதியோடே பொலியவிடாயாக. உன் வயலிலே வெவ்வேறுவகையான விதைகளை கலந்து விதையாயாக. சணல் நூலும் கம்பளி நூலும் கலந்த வஸ்திரங்களை உடுத்தாதிருப்பாயாக (லேவி 19 : 19) உன் திராட்சை தோட்டத்திலே பற்பல விதமான விதையை விதைக்காயாக. மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக. ஆட்டு மயிரும், பஞ்சு நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக் கொள்ளாயாக (உபா 22 : 9-11) மேலும் கவனியுங்கள் அந்நியநுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக (2 கொரி 6 : 14) அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? (2கொரி 6 : 15). பாருங்கள், ஒரு விசுவாசி ஒரு விசுவாசியையே திருமணம் செய்ய வேண்டும். அவிசுவாசியை திருமணம் செய்து விசுவாசியாக்குவேன் என்பது பிசாசின் கண்ணி.

22. தேவனுடைய பிரமாணம் இப்படியிருக்க, தன்னை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவன் ஐந்துவகை ஊழியத்தில் தன்னை ஒருவனாக நியமித்துள்ளார் என கூறிக்கொண்டு தன் சாதூரிய ஞானத்தினால் ஒரு கூட்டம் ஜனங்களை ஆதாயப்படுத்தி, அவர்களை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகிறேன் என கூறிக்கொண்டு, தன் ஆண், பெண் பிள்ளைகளுக்கு ஸ்தாபனசபைகளில் உள்ள ஒரு அவிசுவாசிகளுக்கு எப்படி திருமணம் செய்து வைக்க முடியும்? முடியாது. அவன் ஒரு மாய்மாலக்காரன். அவனை சார்ந்தவர்கள் ஏமாளிகள். வஞ்சிக்கப்படுகிறார்கள். இக்காலத்திற்குறிய செய்தியில் இருக்கிறோம் என கூறிக்கொள்ளும் அநேக பாஸ்டர்களுடைய இல்லறவாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. ஆதலால் அவர்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்கள். அப்படிப்பட்ட கூட்டத்தை விட்டு வெளியேறுவது உங்கள் சுயாதீனம், நான் உங்களை கட்டாயப்படுத்தமுடியாது. ஆனாலும் விலகுவது உங்கள் ஆத்துமாவிற்கு நலமாய் இருக்கும்.


23. ஒரு ஸ்திரி தன் புருஷன் உயிரோடிருக்கையில் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் அவள் ஒரு விபசாரி. ஏனென்றால் அவளுக்கு ஒரே நேரத்தில் இரு புருஷர்கள் (While her husband liveth, she be married to another man, she shall be called adulteress, because she has two husbands at a time) இந்நிலையில் அவள் தனக்குரிய சுயாதீனங்கள், தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்கும் உரிமை அனைத்தையும் இழந்துவிடுகிறாள் (1கொரி 6 : 9 -10). பாருங்கள், அவ்வண்ணமாகவே சபையாகிய நாம் கூட ஒரே நேரத்தில் கிறிஸ்துவையும், உலகத்தையும், ஸ்தாபனசபைகளையும் விவாகம் செய்துகொள்ள முடியாது. விவாகம் செய்தால் அது சட்டபூர்வமாகாது. அது ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்கும்போது வேறொருவனுக்கு வாழ்க்கைப்படுவதற்கு, ஒரு விபசார வாழ்க்கைக்கு சமமாகும். **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாய் இருக்கிறேன் எனக் கூறிக்கொண்டு திருமண வேளைகளில் ஒரு ஸ்தாபனசபையிலிருந்து சத்தியத்திற்கு கீழ்ப்படியாத பெண் / ஆண் கொள்ளுவதும், கொடுப்பதும் ஒரு விபசார இல்லற வாழ்க்கையே.**

24. நீங்கள் உங்களை மிகவும் பயபக்தியுள்ளவர்கள் என கூறி, உரிமைக்கொண்டாடுகிறீர்கள். ஆதியில் வேசியாகிய ஏவாளின் குமாரனாகிய காயீனும் தன்னை மிகவும் பக்தியுள்ளவனாகவே காட்டிக்கொண்டான். பாருங்கள், அவன் பலிபீடங்களை கட்டினான். பலிகளை செலுத்தினான். தசமபாகம் கொடுத்தான். தேவனிடத்தில் பயபக்திக்குரியவன் செய்யும் அனைத்து செயல்களையும் அவன் செய்தான். ஆனால்அவன் தேவனுடைய வார்த்தையை / பிரமாணங்களை கைக்கொள்ளாதவனாய் இருந்தான். ஏனென்றால் அவன் தேவனிடமிருந்து தேவனுடைய வார்த்தையிலிருந்து வரக்கூடிய வெளிப்பாடுகளை காணத்தவறினான். **தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடு ஒருவனுக்கு மிக மிக அவசியம். மத் 28: 19 க்கும் அப் 2:38 க்கும் உள்ள வெளிப்பாடு கிடைக்காததால் தான் இன்று ஸ்தாபனசபை மக்களும், அவர்களுடைய**

**ஊழியக்காரர்களும் இடறுகிறார்கள்.** பாருங்கள் நீங்கள் ஒரே நேரத்தில் தேவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவுக்கு கற்புள்ளவர்களாகவும், அதே நேரத்தில் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட, ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபன சபைகளையும் சேவிக்கமுடியாது. **ஸ்தாபனசபைகள் யாவும் தேவனுடைய பிரமாணத்திற்கு முரணாக அமைந்துள்ளது. ஸ்தாபனசபைகள் விபசாரத்திற்கு ஊற்றாக அமைந்துள்ளது. நீங்கள் ஸ்தாபன சபைகளில் காணப்படும் மனுஷர்களுடைய பாரம்பரியங்களை, போதனைகளை, உபதேசங்களை பற்றிக்கொண்டிருக்கும் வரைக்கும் உங்களை தேவனுடைய வார்த்தை விபசாரி என்றே அழைக்கிறது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை மறுதலிக்கும் ஸ்தாபன சபைகளை சேர்ந்திருந்து அவைகளின் கோட்பாடுகளில் வாழும் வரைக்கும் நீங்களும் விபசாரரே. அது அப்படி தான். தேவனுடைய வார்த்தை அப்படித்தான் கூறுகிறது.**

25. **திருமண வாக்குறுதி என்ன?** தேவநியமத்தின்படி இருவரும் விவாக நிலையில் ஒருமித்து வாழவும், கணவன் : சுகத்திலும் துக்கத்திலும், நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும் தன்மனைவியை தன் சரீரமாக நேசித்து அவளை ஆதரித்து, கனப்படுத்தி, கரம்பற்றி அன்பு செலுத்தி அவளை போஷித்து, காப்பாற்ற வேண்டும். மனைவி : தன் புருஷனை நேசித்து, அவனை கனப்படுத்தி, எந்த காரியத்திலேயும் தன் புருஷனுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இருவரும் தாங்கள் உயிரோடிருக்குமளவும் பிறர் முகம் பார்க்கக்கூடாது. மறுமணம் செய்துகொள்ளக்கூடாது என்பதாகும். அவர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் வாக்குறுதி இவ்வாறு இருக்க, இந்த வாக்குறுதியை மீறி ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்கும்போது அவனை தள்ளிவிட்டு மறுமணம் பண்ணினால் அவள் ஒரு விபசாரி. புருஷனும் மறுவிவாகம் பண்ணினால் அவனும் ஒரு விபசாரகாரன்.

26. சாத்தான் இந்த பூமியையும், வாயுமண்டலங்களையும் ஆளுகை செய்கிறபடியினால் இந்த பூமியில் முரட்டாட்டங்கள், இழிவான செயல்கள், இரத்தம் சிந்துதல், யுத்தங்கள், சாக்கடை அரசியல், பாவம், விபசாரம், சூதாட்டம், கொள்ளை போன்ற பலவிதமான அசுத்தமான செயல்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன. இவைகளை செய்கிறவர்கள் சாத்தானால் ஆண்டுகொள்ளப்பட்டு வழிநடத்தப்படுகிறார்கள். 1,76,000 கோடிகள் கொள்ளை. இது என்ன? இதற்கு மூலகாரணம் யார்? இந்த ஊழல் குறித்து சுமார் ஒரு மாத காலமாக பல செய்திகள் வந்துக்கொண்டிருந்தன. மக்கள் தெருங்களிலும், வீதிகளிலும், பஸ், ரயில் பிரயாணங்களிலும் இது குறிந்து பேசி வந்தனர். முடிவாக குற்றவாளிகள் என கருதப்படுபவர்கள் வீடுகளில் CBI அதிரடி ரைட்ஸ் நடந்தது. குற்றவாளிகள் என கருதப்படுபவர்கள், தாங்கள் நிரபராதிகள் எனக் காட்டிக்கொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அவர்களுக்கு சமயம் கொடுக்கப்பட்டு, பின் ரைட்ஸ். பாருங்கள் இதுதான் இந்தியாவின் CBI கலாச்சாரம், நமது நாட்டு பண்பாடுமாக இருக்கிறது. குற்றவாளிகளை தப்பவித்து, பின்பு விசாரனை செய்தல். பிரதமருக்கு எப்படியாவது தன் ஆட்சியை தக்கவைக்க வேண்டும், ஆதலால் அவர் தன் கண், காது, வாயை பொத்திக்கொள்கிறார். ரைட்ஸ் பின் முடிவு என்ன? வீட்டில் மீந்தது பேப்பர்களை அழிக்கும் மெஷின் மட்டும் தான். ஆங்கில பத்திரிக்கையான டெக்கான் குரோனிக்கல் வெளியிட்ட கார்ட்டுனை இங்கு இணைத்துள்ளேன். இதெல்லாம் எதை காட்டுகிறது? இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. நான் ஒரு அரசியல்வாதி அல்ல. எந்த கட்சியையும் சேர்ந்தவனும் அல்ல. இதுவரை என் வாழ்க்கையில் ஓட்டுப்போட்டதே கிடையாது. ஏனென்றால் நான் அதற்கு தகுதியான நபரை பார்க்கவில்லை. நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலம் எப்படியிருக்கிறது என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட இதை எழுதுகிறேன். எங்கும் ஊழல், லஞ்சம் மலிந்துக்கிடக்கிறது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு குடும்பத்தினர் கட்டுப்பட்டிற்குள் தான் இருக்கின்றன. இது என்ன? இதற்கு எல்லாம் காரணம் யார்? சாத்தான். இதை செய்யும் மனிதர்கள் சாத்தானின் பிடியிலிருந்து செயல்படுகிறார்கள். அவர்களின் பொருளாசையாகிய விக்கிரகாராதனையே இதற்கு காரணம். ஸ்தாபன சபைகளில் அவர்களுடைய பிஷப்கள் நீதிமன்றங்களில் படி ஏறி இறங்குவதற்கும் இதுவே காரணம். இந்த அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களும் ஆடுமாடுகள் வெளியின் புல்லை மேய்கிறது போல, நாட்டின் பொருளாதாரத்தையும், நம்மை சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துப்போட்டார்கள்.



27. எந்த ஒரு புருஷனும் தன் விவாக மனைவி உயிரோடிருக்கும்போது, அவளை தள்ளிவிட்டு, மறுவிவாகம் பண்ணினால் அவன் விபசாரகாரன். தேவனுடைய சரீரமாகிய சபையை பக்திவிருத்திக்குள் நடத்தும் பாஸ்டர் ஊழியத்தில் ஒரு விபசாரகாரன் இருந்துக்கொண்டு ஜனங்களை வஞ்சிப்பதை நீங்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறீர்கள், அவனை விட்டு விலகுவதில்லை. அவன் உங்களை நித்தியத்திற்குள் நடத்துவான் என்ற நம்பிக்கையில் வீணாய் போனீர்கள். **கிறிஸ்தவ மார்க்கத்தில் விவாகரத்து விவாகத்தை கலைப்பது இல்லை.** புருஷன் மரித்தப்பின்பு அவள் தன் புருஷனுடைய பிரமாணத்திலிருந்து விடுதலையாகிறாள். அந்த நிலையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் அவள் விபசாரி அல்ல. அதே போன்று அந்த புருஷனும். **இருவரில் ஒருவர் மரித்தால் தான் மறுவிவாகம்.**

28. ஒரு ஸ்திரீயின் சரீரம் ஜீவன் விதைக்கப்படும் நிலம். ஆனால் ஜீவன் தேவனிடமிருந்து வரவேண்டும். அவரே ஜீவனின் அதிபதி. அவர் ஜீவனை கொடுக்கவும் எடுக்கவும் செய்கிறார். அது அவருக்கே உரிய சுயாதீனம். தேவனுடைய சிருஷ்டிப்பில் மானிட வார்க்கத்தில் உள்ள ஸ்திரீக்கு மட்டும் **கற்பு** என்ற தனித்தன்மை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தனித்தன்மை இதர ஜீவராசிகளில் அது விலங்குகளாக, பறவைகளாக, ஊரும் பிராணிகளாக இருக்கலாம், அதில் எந்த பெண் வர்க்கத்திற்கும் கொடுக்கப்படவில்லை. பாருங்கள் ஒரு ஆண் விலங்கு எத்தனை பெண் விலங்குகளுடனும் உடலுறவு கொள்ளலாம். அதினால் அந்த பெண் வர்க்கம் தன் கற்பை இழந்துவிடாது. ஆனால் மானிடவர்க்கத்தில் மட்டும் ஒரு பெண் தனக்கென்று நியமிக்கப்பட்ட விவாக சம்மந்தமான ஒரு புருஷனை தவிர வேறொரு மனிதனுடன் உடலுறவு கொள்வாளாகில் அவள் தன் கற்பை இழந்தவளாவாள். அப்பொழுது அவள் ஒரு விபசாரி. அவள் அந்த கற்பு தன்மையை கறைப்படுத்தகூடாது. தேவனுடைய சிருஷ்டிப்பில் எந்த ஒரு பெண் வர்க்கமும் விபசாரம் செய்ய முடியாது. ஆனால் மானிடவர்க்கத்தில் மட்டும் ஒரு பெண் விபசாரம் செய்யமுடியும்.

29. விலங்குகள், பறவைகள், ஊரும் பிராணிகள் போன்ற அனைத்து ஜீவராசிகளிலும் ஆண், பெண் தேவனுடைய மூல சிருஷ்டிப்பில் (Original Creation) உள்ளது. ஆனால் மானிடவர்க்கத்தில் மட்டும் ஒரு பெண் உபபொருளாக (by product) உருவாக்கப்பட்டாள். தேவனுடைய அநாதி தீர்மானத்தில் அவள் விபசாரத்தில் விழவேண்டியவளாக இருந்தாள். அவள் அதற்கென்றே அவ்வாறாக உருவாக்கப்பட்டாள். தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்? உருவாக்கப்பட்டவஸ்து உருவாக்கினவனை நோக்கி : நீ என்னை ஏன் இப்படி உருவாக்கினாய் என்று சொல்லாமா? மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தை கனமான காரியத்திற்கும், மற்றொரு பாத்திரத்தை கனவீனமான காரியத்திற்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? உண்டு. தியானியுங்கள் ரோ 9 : 19-21.

30. அவள் வஞ்சிக்கப்படவேண்டும் என்பதற்காகவே அவ்வாறாக உருவாக்கப்பட்டாள். தேவன் அவள் வஞ்சிக்கப்படுவாள் என்பதை அறிந்திருந்தார். அவர் ஆதிமுதல் அந்தம்வரைக்கும் ஒரு காரியத்தைக்குறித்து அறியாதிருந்தால், அவர் தேவன் இல்லையே. பாருங்கள் அவர் எல்லாம் அறிந்தவர். அவர் நித்தியமானவர். எனவே அவர் அறிந்தவராக ஸ்திரீயை அவ்வாறு உருவாக்கினார் / உண்டாக்கினார். தொடக்கத்தில் மனுஷனுக்கு மனைவி இல்லை. மனுஷன் தனக்குள் ஆணும் பெண்ணுமாக இருந்தான். ஆண் பெண் தன்மை ஒரு மனிதனுக்குள் இருந்தது. தேவன் மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் (ஆதி 1 : 27) பின்பு அவள் அவனிலிருந்து எடுக்கப்பட்டாள் (ஆதி 2 : 21-22)

31. ஒரு ஸ்திரீ தன் கற்பை கறைப்படுத்திக்கொள்ள கூடாது. அந்த கற்பு, அவளை நம்பி அவளுக்கென்று கொடுக்கப்பட்ட ஒரு தனிதன்மை. அவள் அந்த சிறப்பு தன்மையை கறைப்படுத்தினால், தன் வாழ்நாட்கள் முழுவதும் கறைப்பட்டவளாகிவிடுவாள். அவளுடைய அந்த கறைப்பட்ட தன்மை எவ்வளவுதான் மன்னிக்கப்பட்டாலும் அவள் தன் வாழ்க்கையில் நீதிமானாக்கப்படமுடியாது. அவள் கறைப்பட்டதற்காக ஒருகால் மன்னிக்கப்படலாம். ஆனால் அவள் இந்த வாழ்க்கையில் நீதிமானாக்கப்படமுடியாது. அது எப்பொழுதும் அவளுடன் இருக்கவேண்டியதொன்றானது. பாருங்கள் அவளுக்கு கற்பு அளிக்கப்பட்டது. கறைப்படுத்தினால் மன்னிக்கப்படலாம். ஆனால் நீதிமானாக்கப்படமுடியாது.

32. ஒரு பெண்ணுக்கு கற்பு, பெண்மை, தாய்மை புனிதமாக அளிக்கப்பட்டுள்ளது. எதற்கு? தன் கணவனை கனப்படுத்த. ஆனால் இன்று என்ன நடக்கிறது? பாருங்கள் அவள் குட்டைகால் சட்டை, சர்மத்துடன் ஒட்டிய இறுக்கமான ஆடைகள், ஆண்கள் அணியும் ஆடைகள் முதலானவைகளை அணிந்துக்கொண்டு ஒய்யாரமாக நடந்து பவனி செல்கிறாள். அப்படிப்பட்டது அவலட்சனமான செயல் என்பதை அவள் உணரும் மனபக்குவத்தில் இல்லை. ஆனால் அவள் தன் கணவனுக்கு கூடுமானவரையில் ஒரு கால் கற்புள்ளவளாக இருக்கலாம். ஆனால் தேவனுடைய பார்வையில் அவள் விபசாரியே. ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாராம் செய்தாயிற்று (மத் 5 : 28) அவன், அவளை பார்க்கும் அவன் உள்ளத்தில் இச்சை உண்டாக்கத்தக்கதாக தன்னை காண்பித்தாள். அவன் உள்ளத்தில் இவளே இச்சையை

உண்டு பண்ணினாள். அந்த குற்றத்திற்கு அவள் தான் காரணம்.

33. தொடக்கத்தில் ஏதேன் தோட்டத்தில் ஸ்திரீயானவளுடைய வித்து நிலம் கறைப்பட்டது. ஏவாள் விபசாரம் செய்தாள். அது மனுக்குலம் அனைத்தையுமே கறைப்படுத்தியது. ஒரு ஸ்திரீயின் புனிதமான பெண்மை, கற்பு, தாய்மை கறைப்பட்டது. ஏவாள் தவறு செய்ய நினைக்கவே இல்லை. ஆனால் ஏவாள் சாத்தானால் வசீகரிக்கப்பட்டாள், வஞ்சிக்கப்பட்டாள். வஞ்சிப்பு என்பது ஒருவன் / ஒருத்தி மனப்பூர்வமாக செய்யும் ஒரு செயலல்ல. ஏவாள் வஞ்சிப்பினால் தவறான ஒன்றை செய்யும்படி கவர்ச்சிக்கப்பட்டாள், தூண்டப்பட்டாள், வஞ்சிக்கப்பட்டாள்.

34. இன்றும் பெண்கள் கர்ப்பத்தடைக்கு, கருசிதைவுக்கு தூண்டப்படுகிறார்கள். உலகப்பிரகாரமான சில காரியங்களுக்காக அவர்கள் கவர்ச்சிக்கப்படுகிறார்கள். பாருங்கள் இந்நாட்களில் பிள்ளைபெறாதவள் மலடி பாக்கியவதி என்று அழைக்கப்படுகிறாள். அதாவது பிள்ளை பெறாத கர்ப்பம், பால் கொடாத முலைகள் பாக்கியவதிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அதாவது பிள்ளைபேறு அவளுக்கு ஒரு அவமானமாக கருதப்படுகிறது. தியானியுங்கள் லூக் 23 : 29 - 31 பிள்ளைகள் ஸ்தானத்தை நாய்குட்டிகள் / பூனைக்குட்டிகள் எடுத்துக்கொண்டன. ஒரு பிள்ளையை பெற்று அதை ஆசையாக கொஞ்ச அவளுக்கு மனமில்லை. ஆனால் ஒரு நாய்க்குட்டியை இடுப்பில் சுமந்து / பூனைக்குட்டியை மார்போடு அனைத்து அதை கொஞ்சிகுலாவுகிறாள். இது எவ்வளவு ஒரு கீழ்தனமான செயல் எவ்வளவு ஒரு பெரிய வெட்கக்கேடான செயல் என்பதை உணரும் பக்குவத்தில் அவள் இல்லை. ஏனென்றால் அவள் சாத்தானால் வழிநடத்தப்படுகிறாள். தன்னுடைய பெண்மை. தாய்மையை அவள் சாத்தானால் கறைப்படுத்திக்கொண்டாள். அவளுக்கு தன் புருஷனுக்கு பிள்கைளை பெற்றுக்கொடுக்க மனம் இல்லை. ஆனாலும் பாருங்கள் அவளுடைய தாய்மை தன்மை / சுபாவம் மாறவில்லை. அவள் கர்ப்பத்தடை செய்துக்கொண்டு, கருச்சிதைவு செய்துக்கொண்டு ஒரு நாயையே ஒரு பூனையையே அல்லது ஏதோ ஒரு வீட்டு பிராணியையோ வளர்க்கிறாள். அதை கொஞ்சுகிறாள். தன் தாய்மை பாசத்தை அதன் மீது காட்டுகிறாள். தேவன் அவளுக்கு கொடுத்த சுபாவம் தாய்மை. அந்த சுபாவம் அவளோடு இணைந்த ஒன்று. ஆனால் அவள் தன் வயிற்றில் ஒரு குழந்தையை வளர்ப்பதற்கு பதிலாக தன் சுபாவத்தை பிரதிபலிக்க மற்றொன்றை வளர்த்து பிசாசுக்கு அடிமையாகிறாள். ஆதியில் ஏவாள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டது போல இக்காலத்திலும் பெண்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அப்படிப்பட்ட பெண்கள் சர்ப்பத்தின் வித்தாக இருக்கிறார்கள்.



35. பாருங்கள் இந்த பூமியில் ஒருவன் பிறக்கும் போது ஆதாமுக்குள் பிறக்கிறான். நாம் இந்த பூமியில் பிறக்கும் போது அது ஒரு இயற்கையான பிறப்பு. இயற்கையாக ஒரு ஆண், பெண் உடலுறவு கொண்டதன் விளைவாக நீங்கள் இங்கு பிறக்கிறீகள். இந்தப் பிறப்பு பாவத்தோடும், மரணத்தோடும் சம்பந்தப்பட்டது. பாருங்கள் என் தாய், என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் என சங்கீதக்காரன் கூறுகிறான். (சங் 51 : 5) நாம் ஒரு இயற்கையின் பிறப்பை, மாம்ச இச்சையினால் ஒரு ஆண் பெண் கொண்ட உடலுறவின் பெலனாக பெற்றோம். ( By nature being pro sexual intercourse, desire by man and women produce earthly child) ஆதலால் இது பாவத்தோடும் மரணத்தோடும் சம்மந்தப்பட்டது: ஏனென்றால் மாம்சத்தின் இச்சை பிதாவினால் உண்டானது அல்ல மாறாக உலகத்தினாலுண்டானது (1 யோ 2 : 16) இப்பொழுது இந்த இயற்கையான சுபாவத்தின்படி நமது வாஞ்சைகள், ஆசைகள் யாவும் இந்த உலகத்தின் ஒரு பாகமாக இருக்கிறது. ஏனென்றால் நாம் இந்த இயற்கையின் ஒரு பிறப்பாக இருக்கிறோம். ஒரு மனிதனுக்கு நீங்கள் நன்மை, தீமை குறித்து போதிக்கும்போது, அவன் தீமையானதை தெரிந்துக்கொள்கிறான். தவறான ஒன்றை தெரிந்துக்கொள்கிறான். ஏனென்றால் அது அவன் சார்ந்துள்ள இயற்கையின் சுவாபமாக இருக்கிறது.

36. பாருங்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் எடுக்கக்கூடாது. அப்படி வேதவாக்கியங்களில் எங்கேயவது கொடுக்க, எடுக்கப்பட்டதாக ஆதாரங்கள் இல்லை. அனைத்து

இடங்களிலும் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே கொடுக்கப்பட்டது, எடுக்கப்பட்டது என வேதவாக்கியங்களில் பல இடங்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்கொடுத்தாலும், அவர்கள் ஆதாரமற்ற ஒரு ஞானஸ்நானத்தையே பெற விரும்பகிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களின் ஒரு பட்டியலை வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டு தருகிறேன்.

அ. வானத்தின் கீழெங்கும் சகல தேசத்தாரிலும் இருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் (அப் 2 : 5,37-41) ஏறக்குறைய 3000 பேர்கள்.

ஆ. இஸ்ரவேலர் ஏறக்குறைய 5000 பேர்கள் (அப் 3 : 12, 4 : 4)

இ. சமாரியர் (அப் 8 : 12 - 17)

ஈ. புறஜாதிகள் (அப் 10 : 44-48)

உ. பிலிப்பியர் (அப் 16 : 12, 33)

ஊ. கொரிந்தியர் ( அப் 18 : 8)

எ. எபேசியர் (அப் 19 : 1-7)

ஏ. கலாத்தியர் ( கலா 3 : 27)

ஐ. கொலோசெயர் (கொலோ 2 : 12)

ஒ. எத்தியோப்பியர் (அப் 8 : 34 - 39)

அப்போஸ்தலர்கள் காலத்தில் அனைவரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் காலத்திற்கு பிறகு நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகள் பிலேயாமின் போதகங்கள் சபைக்குள் நுழைந்து, சபை அரசியலோடு கலந்து, ஸ்தாபன சபைகள் உருவாகியது. முதன்முதலாக உருவாகிய ஸ்தாபனசபை **கத்தோலிக்க திருச்சபை.** இவள் வேசிகளுக்கும் பூமியில் உள்ள அருவருப்புகளுக்கும் தாய் என வெளி 17:5 கூறுகிறது. நம் மத்தியில் உள்ள புராட்டஸ்டண்டு மற்றும் பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபைகள் யாவும் இவளுடைய குமாரத்திகள். ஏனென்றால் இவர்கள் யாவரும் அவளுடைய மூல உபதேசங்களையே போதனைகளாக்கிக்கொண்டார்கள். உதாரணமாக தேவத்துவத்தில் மூவர் என்ற திருத்துவம், பிதா குமாரன் பரிசுத்தஆவி என உச்சரித்து ஞானஸ்நானம், பகலில் இராப்போஜனம், கிறிஸ்துமஸ், லெந்து நாட்கள், ஈஸ்டர் என அஞ்ஞானமார்க்க பண்டிகைகள் முதலியன. தாயும் குமாரத்திகளும் பிசாசினால் வழிநடத்தப்படுகிறார்கள் என்பதை மக்கள் காணாதபடி அவர்கள் கண்கள் குருடாக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் மக்கள் வேதவாக்கியங்களில் யாரும் கொடுக்காத, யாருக்கும் கொடுக்கப்படாத ஒரு ஞானஸ்நானத்தை பெற்று, இரட்சிப்புக்கு அபாத்திரமாய் போனார்கள். ஆனாலும் ஒரு சிறு மந்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவங்களாக காணப்படுகின்றனர். இந்த சிறு மந்தை காணக்கூடாத சரீரமாக இருந்து கிறிஸ்துவுக்குள் இயங்கி ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைந்து, வளர்ந்து, எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர்நோக்கி ஆயத்தமாக இருக்கிறது.

37. இன்னும் கர்த்தருடைய இராப்போஜனபந்தியை பகலில் ஆசரிக்கக்கூடாது. இதை இராக்காலத்தில் தான் ஆசரிக்கவேண்டும் என யாத் 12 அதி, அப் 20 : 7, 1 கொரி 11 அதிகளிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்டினாலும் அவர்கள் தங்கள் பாரம்பரியத்தின்படி இரவு போஜனத்தை, பகல் பேஜனமாகவே ஆசரிக்கிறார்கள். பாருங்கள் அவர்கள் சாத்தானால் இயக்கப்பட்டு வரும் ஸ்தாபன சபைகளின் ஒரு பாகமாகவே இருக்கிறார்கள். வேதவாக்கியங்கள் மீது அவர்களுக்கு நாட்டம் இல்லை. மாறாக ஸ்தாபனசபை உபதேசங்களையே கடைப்பிடிக்க விருப்புகிறார்கள். ஸ்தாபன சபைகள் சாத்தானின் கரத்தில் ஒரு கருவியாக இருக்கிறது என்பதே அவர்கள் அறிந்து, புரிந்துக்கொள்ள முடியவில்லை.

38. நீங்கள் இந்த இயற்கை சுபாவத்திற்கு மரிக்கவேண்டும். இந்த இயற்கையின் சுபாவம் இந்த உலகத்தின் சுபாவமாக இருப்பதால் நீங்கள் அதற்கு மரிக்கவேண்டும். நீங்கள் உங்கள் பாரம்பரியங்களுக்கு, ஸ்தாபன சபை ஐக்கியத்திற்கு, ஸ்தாபனசபை கோட்பாடுகளுக்கு, உபதேசங்களுக்கு மரிக்கவேண்டும். நீங்கள் நாங்கள் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை தரித்துள்ளோம், கிறிஸ்துவின் மணவாட்டி என கூறிக்கொண்டு தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக, சாத்தானின் கரங்களிலிருந்து இயங்கிவரும் ஸ்தாபன சபைகளுக்கு உட்பட்டு, அவைகளை சார்ந்து ஜீவிப்பீர்களானால் நீங்கள் ஒரு விபசாரியே (If you are united to Christ and still married to denomination, you are adulteress.) உன்மேல் ஆளுகை கொண்டுள்ள உலகம், ஸ்தாபன சபை உன்னுடைய முதல் புருஷன். உங்களுடைய இயற்கையான பிறப்பின் மூலம் உலகசிநேகம், ஸ்தாபன சபை ஐக்கியம் உன்னுடைய சுபாவமாயிருக்கிறது. என் தாத்தா இந்த சபையை சேர்ந்தவர், எங்கள் பெற்றோர் அதே சபையை நேசித்தார்கள், நானும் அதே சபை கோட்பாடுகளை பின்பற்றுகிறேன் என்கிறீர்களே. பரம்பரைபரம்பரையாக ஒரே சபையை பின்பற்றி அதனை சேவித்துவருகிறீர்கள். ஆதலால் உலகத்தையும், ஸ்தாபன சபைகளையும் நேசிக்கும் நீங்கள் இந்த உலகத்திற்குரியவர்கள். இந்த ஸ்தாபன சபை ஒன்றின் பாகமாகயிருக்கிறீர்கள். ஆதலால் உங்களில் உள்ள இந்த உலக, ஸ்தாபனசபை சுபாவத்திற்கு நீங்கள் மரிக்கவேண்டும்.

39. தேவனை குறித்து ஸ்தாபன சபை விசுவாசிகளுக்கு ஒன்றுமே தெரியாது. அவர்கள் தேவனை குறித்து ஒன்றும் அறிந்துக்கொள்ளவும், புரிந்துக்கொள்ளவும் முடியாது. ஏனென்றால் அவர்கள் கண்கள் குருடாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தாங்கள் சார்ந்துள்ள ஸ்தாபன சபையின் ஜெப புத்தகங்களையும், கோட்பாடுகளையும், போதனைகளையும், உபதேசங்களையும் அறிந்திருக்கிறார்களேயன்றி தேவனை குறித்து ஒன்றும் அறியவில்லை. பாருங்கள் அவர்கள் வேதவாக்கியங்களில்காணப்படாத அதநாஷியஸ் விசுவாச பிரமாணத்தையும், அப்போஸ்தலர்கள் விசுவாச பிரமாணத்தையும், லித்தானியா என்ற பொதுவான பிரார்த்தனையையும், திடப்படுத்தல் போன்ற சடங்காச்சரத்தையும் அறிந்திருக்கிறார்களேயன்றி தேவனை குறித்து ஒன்றும் அறியவில்லை. தேவனை குறித்து அறிந்திருப்பார்களேயானால் இப்படிப்பட்ட பிரமாணங்களுக்கு தங்கள் கண்களை மூடிக்கொள்வார்கள், செவியை அடைத்துக்கொள்வார்கள், வாயை பொத்திக்கொள்வார்கள்.

40. ஒருபக்கம் நீங்கள் உங்களை கற்புள்ள, புத்தியுள்ள, வேதவாக்கியங்களை விசுவாசிக்கும், அதன்படி ஜீவிக்கும் கிறிஸ்தவர்கள் எனக்கூறிக்கொண்டு உலகத்தோடும், இந்த ஸ்தாபனசபை விவகாரங்களோடும் உங்களை சம்பந்தப்படுத்திக்கொள்ள முடியாது. ஸ்தாபன சபைகள் அரசியலோடு சம்பந்தம் கொண்டிருப்பது உலகத்தோடு சம்பந்தம் கொண்டிருப்பதை காட்டுகிறது. பாருங்கள் உங்கள் ஸ்தாபனசபை தலைவர்கள் அனைவரும் அரசியலோடு சம்பந்தப்பட்டவர்கள். மறைந்த உங்கள் திரு. D.G.S. தினகரன் அரசியலோடு மிக்க சம்பந்தம் கொண்டவர். அவருடைய மகனும் தன் தகப்பனார் வழியே. அவ்வண்ணமாகவே உங்கள் இந்திய சுவிசேஷ திருச்சபை பிஷப் திரு. எஸ்ரா சற்குணம் அவர்கள் ஒரு பக்கா தி.மு.க. அவர்கள் எல்லாம் கிறிஸ்துவை அறியாததே இதற்கு காரணம். இவர்கள் தங்கள் காரியங்களை நிர்வகிக்க தேவனை தேடாமல் அரசியலை தேடினார்கள். இவர்கள் மட்டுமல்ல இன்னும் அநேக ஸ்தாபன சபை தலைவர் இதையே செய்கிறார்கள். உதாரணத்திற்கு இருவர் பெயரை குறிப்பிட்டேன். இவர்கள் சாத்தானுடைய கூட்டத்தாராயிருந்து சாத்தானால் வழிநடத்தப்படுகிறார்களேயன்றி தேவனுடைய ஆவியினால் அல்ல, பரிசுத்த ஆவியினால் அல்ல. பரிசுத்த ஆவிக்கும் இவர்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. நீங்கள் இந்த உலகத்தையும், தேவனையும் ஒரே நேரத்தில் சேவிக்கமுடியாது. தேவனை சேவிக்க உலகம் உங்களுக்கு மரித்தாக வேண்டும். ஏனென்றால் இந்த உலகத்தின் அதிபதிக்கு தேவனிடத்தில் பங்கு எதுவும் இல்லை, கிடையாது. அப்படியே உங்களுக்கும் பங்கில்லாதிருக்கவேண்டும். உலகம் உங்களுக்குள் செத்தால் தான் நீங்கள் தேவனை சேவிக்கமுடியும். ஒன்று சாகவேண்டும், மற்றொன்று ஜீவிக்கவேண்டும்.

41. இஸ்ரவேல் ஜனங்களில் குழந்தைகள், ஆண் பெண், புறஜாதி இப்படியாக இஸ்ரவேல் ஜனங்களை சார்ந்து இருந்தவர்களில் அனைவருமாக சுமார் 20 லட்சம் பேர்கள் எகிப்தை விட்டு வெளியே வந்தனர். எல்லாரும் நெடுக ஒன்றாக பிரயாணம் செய்தனர். எல்லாரும் தேவனுடைய அதிசயங்கள், அற்புதங்களை கண்டனர். ஒரே மன்னாவை புசித்தனர், பிளந்த கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீரை குடித்தனர். பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினிஸ்தம்பத்தினாலும் பிரயாணத்தில் வழிநடத்தப்பட்டார்கள். மேகஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் அவர்களை பின் தொடர்ந்தது. முடிவு என்ன? இதில் இருவர் காலேப் மேலும் யோசுவா மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை அடைந்தார்கள். இவ்விரண்டுபேர் மாத்திரமே தேவனுடைய உண்மையான விசுவாசிகளாக காணப்பட்டார்கள். மற்றவர்கள் அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளுமாய் இருந்தார்கள். ஆதலால் அவர்கள் கானான்தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. தியானியுங்கள் எபி 3 : 19.

42. பாருங்கள் அவ்வண்ணமாகவே ஸ்தாபன சபைகளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதாக கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் வேதவாக்கியங்களை கைக்கொள்வதில்லை. உலகத்தையும் அரசியலையும் சார்ந்து இருக்கிறார்கள். ஒரு புறம் கிறிஸ்து மீதும் மறுபுறம் இந்த உலகத்தின் மீதும் உரிமைக்கொண்டாடும் இவர்கள் விபசாரக்காரர்கள் என தேவன் கூறுகிறார்.

43. ஸ்தாபன சபை விசுவாசிகளாகிய பேர் கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்துவை **விசுவாசிக்கும்போது** பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டதாக நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. அவர்கள் பரிசுத்த ஆவியை பெறவே இல்லை. ஒருவன் இயேசு கிறிஸ்துவை **விசுவாசித்த பிறகே** பரிசுத்த ஆவியை பெறமுடியும், இயேசு கிறிஸ்துவை பற்றிய விசுவாசத்தினால் தொடர்ந்து ஜீவித்து, பரிசுத்த ஆவியை பெறவேண்டும். பரிசுத்த ஆவியை பெறாத மக்கள்தான் பேர் கிறிஸ்தவர்கள். இவர்கள் ஒருபுறம் உலகத்தையும், ஸ்தாபன சபைகளையும் சேவித்து அதன் மீது உரிமை கொண்டாடி மறுபுறம் கிறிஸ்துமீதும் உரிமை கொண்டாடுகிறார்கள். பரிசுத்த ஆவியை பெற்ற மக்கள் கிறிஸ்து மீது மாத்திரமே உரிமை கொண்டாடுகிறார்கள். இவர்கள் உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறுவது கிடையாது (1 யோ 2 : 15).

44. நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்க மறுபடியும் பிறக்கவேண்டும். நீங்கள் உங்கள் இயற்கையின் சுபாவத்திற்கு மரித்து மற்றொரு சுபாவத்திற்குள் இணையவேண்டும். நீங்கள் உங்கள் இயற்கையின் சுபாவத்திற்கு மரித்தபின், அதினின்று விடுதலையாகி, மற்றொரு சுபாவத்திற்குள் இணைகிறீர்கள். (You have got to die to your old nature in order to bring forth new life).

45. ஜென்ம சுபாவம் உண்டு, திவ்வியசுபாவம் உண்டு. ஜென்ம சுபாவம் ஜென்ம சரீரத்திற்குரியது. திவ்வியசுபாவம் ஆவிக்குரிய சரீரத்திற்குரியது. ஜென்ம சரீரம் விதைக்கப்படவேண்டும். அதன் சுபாவம் மாம்சத்தின் கிரியைகள். அதாவது விபசாரம் (Adultery), வேசித்தனம் (Fornication), அசுத்தம் (Uncleaness), காமவிகாரம் (Lasciviousness), விக்கிரகாராதனை (Idolatry), பில்லி சூனியம் (Sorcery), பகைகள் (Hatred), விரோதங்கள் (Strife), வைராக்கியங்கள் (Jealousy), கோபங்கள் (Wrath), சண்டைகள் (Factions), பிரிவினைகள் (Seditions), மார்க்கபேதங்கள் (Heresies) பொறாமைகள் (Envyings), கொலைகள் (Murders), வெறிகள் (Drunkeness), களியாட்டுகள் (Revelings) முதலியன (கலா 5 : 19-21).

46. மாம்சத்திற்குரிய இந்த ஜென்ம சரீரம் விதைக்கப்பட்டு ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கவேண்டும். (1 கொரி 15 : 44) இதன் சுபாவம் ஆவிக்குரிய கனிகள் : அன்பு (Love), சந்தோஷம் (Joy) , சமாதானம் (Peace), நீடிய பொறுமை (Long Sufferings) தயவு (Gentleness), நற்குணம் (Goodness), விசுவாசம் (Faith), சாந்தம் (Meekness), இச்சையடக்கம் ( Self Control) முதலியன (கலா 5 : 22, 23) பாருங்கள் ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் (எபே 5 : 9) ஆம் நீங்கள் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடையும்போது (2 பேதுரு 1 : 3-8) உங்களிடத்தில் இந்த ஆவியின் கனி காணப்படும். அது உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.

47. ஜென்ம சுபாவத்தில் நாம் அக்கிரமங்களிலும், பாவங்களிலும் வளர்ந்து வந்தோம், இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகார பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துவந்தோம். அதோடு மட்டுமல்ல நமது மாம்ச இச்சைகளின்படியே நடந்து நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளை செய்து சுபாவத்திலே மற்றவர்களைபோல கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருந்தோம். இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்திருந்தோம். வீண்பெருமை பாராட்டுகிறவர்களாக இருந்தோம். பாருங்கள் நான் ஒரு இண்டர்நேஷனல் பிரசங்கி. சத்தியத்திற்கு விரோதமாய் பொய் சொல்லுகிறவர்களாய் இருந்தோம். சகல விதமான துர்செய்கைகளும் நம்மிடத்தில் காணப்பட்டது. (எபே 2 : 3, யாக் 3 : 14, 15).

48. ஒரு மனுஷன் கிருபையினால் இரட்சிக்கப்பட்டபோது நற்கிரியைகளை செய்கிறதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாய் இருக்கிறான் (எபே 2 : 10) இப்பொழுது நீங்கள் மரித்தோரில் இருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருடையவராகி, கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களானீர்கள். இப்போது நியாயப்பிரமாணமில்லாமல் உங்களில் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. (Righteousness of God without law is manifested) ரோ 3 : 21. இந்த தேவநீதி என்ன? இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசமே (ரோ 3 : 22). நீங்கள் கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல. மாறாக இது தேவனுடைய ஈவு (எபே 2 : 8) பாருங்கள் இது கிரியைகளினால் உண்டானது அல்ல மாறாக கிருபையினால் உண்டானது. (எபே 2 : 9).

49. கிறிஸ்து சிலுவையில் நமக்கென்று சாபமாகி நம்மை நியாயப்பிராமாணத்தின் சாபத்தினின்று மீட்டார். கிறிஸ்து சிலுவையின் மூலமாய் நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார் (கலா 3 : 13, ரோ 10 : 4) கிரியை நியாயப்பிரமாணத்திலிருந்து நம்மை பிரித்தது. நியாயப்பிராமாணத்திற்கு மரிப்பது என்றால் நியாயப்பிரமாணமின்றி வாழ்வது அல்ல மாறாக கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு உட்பட்டிருப்பதாகும். (1கொரி 9 : 21) அப்படியானால் **கிறிஸ்துவின் பிரமாணம் என்ன?** நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்பதே (யோ 15 : 12) அன்பு : இதற்குள் நியாயப்பிரமாணம் முழுவதும் அடங்கியிருக்கிறது. (ரோ 13 : 9) இது ராஜரீக பிரமாணம் (யாக் 2 : 8) ஆம், தேவன் அன்பாகவேயிருக்கிறார் (1யோ 4 : 16) நாம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வதே நாம் அவரிடத்தில் அன்பு கூறுவதாகும் (1 யோ 5 : 3) நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்டது. (யோ 1 : 17) மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நாம் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படகூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று கிறிஸ்துவினாலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான். (அப் 13 : 39).

**50. ஒருவன் மனந்திரும்பி, தன் பாவத்தின் மன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவன் கிறிஸ்துவோடுக்கூட மரித்து, அடக்கம்**

**பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப்பெற்று, தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளும்போது, புதிய ஆவிக்குரிய இணைப்புக்குள் வருகிறான். தனது ஜென்ம இயற்கை சுபாவஇணைப்பிலிருந்து பிரிந்து, விலகி மறுபடியும் பிறப்பதினால் மறுபடியும் விவாகம் செய்து அதாவது கிறிஸ்துவை விவாகம் செய்து, புதிய ஆவிக்குரிய இணைப்புக்குள் வருகிறான்.**

51. **ஞானஸ்நானம் என்பது என்ன?** இது தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை (1பேதுரு 3 : 24) ஆனாலும் ஆதாமைப்போன்று உடன்படிக்கையை மீறி, தேவனுக்கு விரோதமாக துரோகம் பண்ணுகிறவர்களும் உண்டு. நிச்சயமாக யார் யார் பெயர்கள் ஆட்டுகுட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதோ அவர்கள் மாத்திரமே இந்த இணைப்புக்குள் வருவார்கள். யார் யார் பெயர்கள் ஸ்தாபன சபைகளின் அங்கத்தினர் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதோ, அவர்கள் பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்படவில்லை. ஆதலால் அவர்கள் இந்த ஆவிக்குரிய இணைப்புக்குள் வரமுடியாது. இந்த இணைப்புக்குள் வருபவர்கள் பெயர்கள் முன் குறிக்கப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. தேவன் எவர்களை முன்குறித்தாரே அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார், எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியும் இருக்கிறார், எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் (ரோ 8 : 29, 30).

52. பாருங்கள் இதுதான் தேவனுடைய முன்அறிந்து, முன்குறிப்பதாகும்.இவ்வாறாக முன்னறிந்து, முன்குறிக்கப்பட்டவர்களின்பெயர்கள் மாத்திரமே ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் காணப்படும். இவர்கள் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டவர்கள், இவர்கள் உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறுவது கிடையாது. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் யார் யார் பெயர் காணப்படுகிறதோ, அவர்கள் பெயர்கள் எக்காரணம்கொண்டும் அதிலிருந்து எடுக்கப்படுவதில்லை, கிறுக்கி போடப்படுவதுமில்லை. ஏனென்றால் அது அங்கு இருக்கவேண்டும் என முன் குறிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி. அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவதில் பங்கு பெறுவார்கள். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் உன் பெயர் எழுதப்பட்டிருப்பது கிறிஸ்துவுக்கும் உங்களுக்கும் இடையில் உள்ள விவாக சான்றிதழ். நீங்கள் தேவனுக்கு முன்பாக பரிபூரணமுள்ளவர்களாக இருக்கிறீர்கள். ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைந்திருக்கிறீர்கள். இவர்கள் உலகத்திலுள்ள எல்லா ஸ்தாபன சபைகளிலிருந்து, உலகத்தினின்றும், உலகத்தின் அசுத்தங்களிலிருந்து, உலகத்தின் அனைத்து காரியங்களிலிருந்தும் வெளியே அழைக்கப்பட்டு, கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறார்கள்.

53. இந்த **பொல்லாத விபசார சந்ததியை விட்டு வெளியே வர முதலாவது படி :** தேவனிடமாய் மனந்திரும்புகின்ற காரியம். பின்பு அதை தொடர்ந்து தண்ணீர் ஞானஸ்நானம். பாருங்கள் நீங்கள் மனந்திருப்பி ஒவ்வொருவரும் உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் (அப் 2 : 38) **பழைய பாவங்கள் மன்னிக்கப்படுதலை அல்லது உண்மையான மனந்திரும்புதலை ஞானஸ்நானமானது காட்டுகிறதாயுள்ளது. வருங்காலத்தின் பாவத்திற்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.** பாருங்கள் மனந்திருப்பி பாவமன்னிப்புகொன்று ஞானஸ்நானம் பெற்ற காரியம் பழைய பாவங்கள் எடுக்கப்படுதலையே குறிக்கிறதாய் உள்ளது. அதாவது உன் பழைய பாவங்கள் அழிக்கப்படுகிறது. ஆனால் வருங்காலத்தின் பாவங்களுக்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது இங்கு இருக்கும் ஜென்ம சுபாவமான, சர்ப்பத்தின் காரணமாக நீங்கள் செய்த பழைய பாவங்கள் எடுக்கப்பட்டு போகின்றன. ஆனால் இதை செய்ய காரணமாயிருந்த காரியம் இன்னும் அங்கேதான் இருக்கிறது. அது தான் பழைய வேராகிய பொல்லாங்கு. நீங்கள் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவர் உங்கள் பாவங்களை மன்னிக்கிறவராயிருக்கிறார். சாத்தானின் கருவியாக இருந்த நீங்கள் இப்பொழுது மீட்கப்பட்டிருக்கிறீர்கள்.

54. **மனந்திரும்புதல் என்பது என்ன?** நான் ஒரு காரியத்தை குறித்து இந்த, இந்த எண்ணங்கள் என் உள்ளத்தில் கொண்டிருந்தேன். இப்பொழுது சத்தியத்தை அறியும் அறிவு எனக்குள் வந்ததால், பழைய எண்ணத்திலிருந்து என்னை மாற்றி, புதிய எண்ணத்திற்குள் வருகிறேன். அதாவது ஒரு மனமாற்றம். பழைய எண்ணத்திலிருந்து புதிய எண்ணத்திற்கு ஒரு மனமாற்றம்.

அ. முன்பு தேவத்துவத்தில் மூன்றுபேர்கள் உண்டு என்ற எண்ணத்தை உடையவனாயிருந்தேன். இப்பொழுது எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு : அவர் எல்லார்மேலும் (பிதாவாக) அவர் எல்லாரோடும் (இந்த பூமியில் குமாரனாக) அவர் உங்கள் எல்லாருக்குள்ளும் (நமது உள்ளத்துக்குள் பரிசுத்த ஆவியாக) இருக்கிறார் என எபே 4 : 6 ஐ தியானிக்கும்போது, மேலும் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது என கொலோ 2 : 9 ஐ தியானித்தபோது தேவத்துவத்தில் மூன்று

பேர்கள்அல்ல மாறாக ஒருவரே என்ற அறிவை உடையவனானேன். என் பழைய எண்ணத்தில் ஒரு புதிய திருப்பம். முன்பு தேவத்துவத்தில் மூன்று பேர்கள் என்கிற எண்ணத்தில் இருந்தேன். இப்பொழுது தேவத்துவத்தில் ஒருவர் என்ற எண்ணம் கொண்டேன். ஒரு மனமாற்றம்.

ஆ. அன்று வேதவாக்கியங்களில் எங்கும் கொடுக்க, எடுக்கப்படாத ஞானஸ்நானத்தை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியென உச்சரித்து பெற்றேன். இப்பொழுது எனது உள்ளத்தில் ஒரு மனமாற்றம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துநாமத்தினால் பாவமன்னிப்பை பெறவேண்டும். (அப் 10 : 43). நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமாமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என அறியவந்தேன். (அப் 4 : 12) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என அறிய வந்தேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களையே கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப் 2 : 47) என அறியவந்தேன். ஆதலால் இப்பொழுது வேதவாக்கியங்களில் அனைவரும் பெற்ற / கொடுத்தபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுப்பதே சரி என்ற ஒரு புதிய எண்ணம் / மனமாற்றம் கொண்டு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றேன்.

இ. முன்பு கர்த்தருடைய இராபோஜனத்தை, பகல் போஜனமாக ஆசரித்தேன். இப்பொழுது கர்த்தருடைய பஸ்கா குறித்து யாத் 12 அதிகாரத்தை தியானித்தேன். இயேசு கிறிஸ்து நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாக அடிக்கப்பட்டார் (1 கொரி 5 : 7) என அறியவந்தேன். ஆட்டுக்குட்டி அன்று மாலை அடிக்கப்பட்டு, இரவில் புசிக்கப்பட்டது. நாமும் இயேசு கிறிஸ்து மாலையில் அடிக்கப்பட்டார் என அறிவோம். பஸ்காவாகிய அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் நாமும் இரவிலே புசிக்க, பானம்பண்ணவேண்டும் என்ற அறிவை அடைந்தேன்.(1கொரி 11 : 23) எனது மனதில் ஒரு மாற்றம். அது வேதவாக்கியங்களை கொண்டு ஏற்பட்டது. இப்பொழுது நான் இரவிலே கர்த்தருடைய இராபோஜனத்தைப் புசிக்கிறேன். அதுவும் வருடத்தில் ஒரு நாள் அல்ல அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தின்படி வாரத்தின் முதலாம் நாள் புசிக்கிறேன். (அப் 20 : 7) இப்பொழுது எனது மனதில் ஒரு மாற்றம்.

ஈ. முன்பு நான் இருமனைவிகளை உடையவனாயிருந்து கர்த்தர் என்னை ஏற்படுத்தினார் எனக்கூறி, தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து (பாஸ்டர் ஊழியம்) வந்தேன். இப்பொழுது வேதவாக்கியங்களை கொண்டு நான் தவறு என அறியவந்தேன்( 1 தீமோ 3 வது அதி) முன்பு எனக்கு குழந்தைபாக்கியம் இல்லாவிட்டாலும் கர்த்தர் என்னை பாஸ்டர் ஊழியத்திற்கு அழைத்தார் எனக் கூறி என்னை நானே ஏமாற்றிக்கொண்டிருந்தேன், மக்களையும் ஏமாற்றினேன். இப்பொழுது பாஸ்டர் மனைவி மக்களையுடைய ஒரு குடும்பஸ்தனாக இருக்கவேண்டும் என அறிய வந்தேன். எனது உள்ளத்தில் ஒரு மனமாற்றம். எனது பாஸ்டர் ஊழியத்தை விட்டு விட்டேன். விசுவாசியாக இன்று சபையில் இருக்கிறேன்.

உ. முன்பு கர்த்தருடைய தசமபாகம் பாஸ்டருக்கு மட்டுமே உரியது என கூறி, கர்த்தருக்குரிய தசமபாகத்தில் என் பங்கை எடுத்தக்கொண்டு மீதமுள்ள நான்கு பங்கையும் இதர ஊழியங்களுக்க பங்கிட்டுக்கொடுக்காது என் வயிற்றையே நிரப்பினேன். இதர ஊழியங்களை வஞ்சித்து நான் மட்டும் உல்லாசமாய் வாழ்ந்துவந்தேன். இப்பொழுது ஒரு மனமாற்றம். கர்த்தருக்குரிய தசமபாகத்தை ஐந்து வகை ஊழியங்களுக்கும் பகிர்ந்துக்கொடுப்பேன் என்ற மனமாற்றம். அப்படியே பகிர்ந்து கொடுக்கிறேன்.

ஊ. முன்பு என்னை அகிலஉலக பிரசங்கி, அப்போஸ்தலன், சுவிசேஷகன், மேய்ப்பன் என அழைத்துக்கொண்டு மக்களையும் ஊரையும் ஏமாற்றி அனைத்து ஐந்துவகை ஊழியங்களையும் எனக்குள் கொண்டு ஒரு பந்தா ஊழியம் செய்தேன். இப்பொழுது ஐந்துவகை ஊழியங்களும் தனித்தன்மை வாய்ந்தது என அறியவந்தேன். எனது அழைப்பை சரிசெய்துக் கொண்டேன். ஊழியத்தை விட்டு விலகி இப்பொழுது எனது மற்றும் என் குடும்பத்தினர் இரட்சிப்புக்கு வழி தேடுகிறேன். மனதில் ஒரு மாற்றம்.

எ. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது (மத் 6 : 24), தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் தன்னை சேவகம் செய்ய எழுதிக்கொண்டவருக்கு ஏற்றவனாய் இருக்கும்படி பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளகூடாது என 2 தீமோ 2 அதிமூலம் அறியவந்தேன். முன்பு அரசாங்கம் ஊழியம் செய்து வந்த என் உள்ளத்தில், புரோக்கராக, தரகராக இருந்து மக்களை ஏமாற்றி பணம் சம்பாத்தித்ததிலிருந்து ஒரு மானமாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது நான் என்னை மாற்றிக்கொண்டேன். ஊழியத்தை விட்டு விட்டேன்.

ஏ. முன்பு பலவிதான இசைக்கருவிகளை கொண்டு தேவனை ஆராதனைசெய்யும் ஸ்தலத்தில் இசைத்து ஆடிப்பாடி துள்ளிக்குதித்தேன். இப்பொழுது ஆவியோடும் கருத்தோடும் தேவனை துதித்துப்பாடவேண்டும் என உணர்ந்தேன் (1 கொரி 14 : 15) எனது உள்ளத்தில் ஒரு மனமாற்றம். இப்பொழுது தேவனை ஆராதிக்க இசைக்கருவிகளை உபயோகிப்பது இல்லை. இசைக்கருவி மாம்ச இச்சைகளை தூண்டுகிறதாகயிருக்கிறது. ஆகையால் அது சாத்தான்.

இப்படியாக பல எண்ணங்களிலிருந்து ஒரு மனமாற்றம் ஏற்பட்டு சத்தியத்தின் படி தன்னை சீர்திருத்திக்கொள்வதே மனந்திரும்புதல்.

55. **இரண்டாவது படி :** பரிசுத்தமாகுதலாகும். இது உங்களை பரிசுத்தமாக்குதலுக்கும், சரியானபடியோசனை

செய்தவதற்கும் உங்கள் மனதை ஆயத்தப்படுத்துகிறது. பரிசுத்தமாகுதல் என்ற பதம் சுத்தப்படுத்தி ஊழியத்திற்கென்று தனியே, பிரத்தியேகமாக வைக்கப்படுதல் என்ற கூட்டு அர்த்தமுள்ளதாயிருக்கிறது.

56. **மூன்றாவது படி :** பரிசுத்தஆவியாகிய அக்கினி. தேவன் தாமே நமக்குள் வாழ்வதாகும். தேவஅக்கினி நம்முடைய இருதயத்தை பாவத்தினின்று சுத்திகரித்து, பரிசுத்த ஆவியை நமக்குள் ஊற்றப்படுவதாகும். பரிசுத்தஆவி நமக்குள் வாசம் செய்வதால் அதே ஜீவனை நாம் மீண்டும் கொண்டுவருகிறோம். நாம் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்கிறோம். தேவனுடைய ஆவி நமக்குள் வாசமாயிருப்பதால் நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்.

57. ஒரு மனிதன் மனந்திரும்பும்போது, ஒருவேளை அவனுடைய பழைய வாழ்க்கை துன்மார்க்கமாயிருந்தது என வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு துன்மார்க்க ஸ்திரீயை பார்க்கும்போதும் அவன் சோதனைக்குட்படுகிறான். அதே விதமாக ஒரு மனிதனின் பழைய வாழ்க்கை குடிகாரனாக இருந்திருக்கலாம். ஒவ்வொரு சமயமும் மதுவின் வாசனையை அவன் நுகரும்போதெல்லாம் அவன் சோதனைக்குட்படுகிறான். பாருங்கள் இன்னுமாக அது அங்கே உள்ளது. ஆனால் அவன் பரிசுத்தமாகும்போது பாவம் செய்யவேண்டும் என்ற ஆசையை அவனிலிருந்து அகன்றுவிடுகிறது. ஆனால் அவன் இன்னுமாக சோதனைக்குட்படுகிறவனாக இருந்தாலும் பாவம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் / ஆசை அவனிலிருந்து அகற்றப்படுகிறது. தேவன் மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத் 3 : 5) அதாவது ஒரு மனிதன் மனமாறும்போது அவன் பாவி என்ற நிலையிலிருந்து பரிசுத்தமான ஒரு நிலைக்கு மாறுகிறான். பழைய நிலையிலிருந்து ஒரு புதிய நிலைமைக்கு மாற்றப்படுகிறான்.

58. பாருங்கள் இருந்தாலும் அவன் இன்னுமாக சரியாக இல்லை. பின்பு அவன் மூன்றாம்படியாகிய பரிசுத்தஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் பெறும்போது அது அவனை சுத்திகரித்து அக்கினினால் சுட்டெரித்து தேவனுடைய ஊழியத்தில் வைக்கிறது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். (1பேதுரு1 : 12) ஆனால் பரிசுத்தமாகுதல் ( இரண்டாம்படி) ஊழியத்திற்கென்று அவனை ஆயத்தப்படுத்துகின்றதாயிருக்கிறது. இரண்டாம் படி ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துகிறது. மூன்றாம் படி ஊழியத்தில் வைக்கிறது.

59. இயற்கை ஆவிக்குரியதற்கு ஒப்பனையாயுள்ளது. இயற்கையில் ஒரு பெண் தன்னுடைய பிரசவத்தின் மூலம் ஒரு குழந்தையை பிறப்பிக்கும்போது முதலாவது அங்கு வெளிப்படும் காரியம் தண்ணீர். பின்பு இரத்தம். அதன் பின்புதான் ஜீவன். வெளி வந்த குழந்தையை எடுத்து ஒரு சிறு அடிகொடுக்கும்போது அது சத்தமிடுகிறதாயிருக்கிறது. அது என்ன? தண்ணீர், இரத்தம், ஆவி. ஒரு குழந்தை தேவனுடைய இராஜ்யத்தில் பிறக்கும்போதும் தண்ணீர், இரத்தம், ஆவி என்ற அதே விதமான வழியிலே வருகிறதாயிருக்கிறது.

60. தேவன் தாமே பரிசுத்த ஆவி (கிறிஸ்து) என்னும் நபராக மனித இருதயத்திற்கு வந்து வாழ்வதற்கு முன்பு, அவன் முதலாவதாக மனந்திரும்பி, அவன் யாருக்கு சொந்தம் என்பதை காண்பிப்பதற்காக அவருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டியதாயுள்ளது. கிறிஸ்துவை தரித்துக்கொள்ள வேண்டியதாயுள்ளது. பின்பு அவன் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படவேண்டும். அதன்பிறகு தேவனிடத்திலிருந்து பரிசுத்த அக்கினி வந்து உலகத்தின் தன்மையையும், பாவம் செய்யவேண்டும் என்ற ஆவலையும் சுட்டெரிக்கின்றது. இப்பொழுது பாருங்கள், தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் (1யோ 5 : 18) பாவம் செய்வதற்கு அவனால் முடியாது. பாருங்கள் ஒரே சமயத்தில் அவன் பாவியாகவும், மீட்கப்பட்டவனாகவும், பாவியாகவும் பரிசுத்தவானாகவும், நல்லவனாகவும் கெட்டவனாகவும், புத்தியுள்ள கன்னிகையாகவும் புத்தியில்லாத கன்னிகையாகவும், வெளிச்சத்தின் பிள்ளையாகவும் இருளின் பிள்ளையாகவும், கற்புள்ளவளாகவும் விபசாரியாகவும் இருக்கமுடியாது. அவ்வண்ணமாகவே ஒரே நேரத்தில் அவன் கிறிஸ்துவின் மீதும், உலகத்தின் மீதும் உரிமைக்கொண்டாட முடியாது. ஒரே நேரத்தில் அவர்கள் கிறிஸ்வின் சரீரமாகிய சபைமீதும், ஸ்தாபனசபைகளின் மீதும் அங்கம் வகிக்கமுடியாது. ஒருவன் அடமானக்கடைக்குள் உள்ளேயும் வெளியேயும் இருக்கமுடியாது தேவனுடைய வார்த்தையை தங்கள் பின்புறமாக தள்ளிவிட்டு கிறிஸ்துவின் நாமத்தை போலியாக தரித்துக்கொண்டு தங்களை மணவாட்டி, ஐந்துவகை ஊழியங்களில் ஒருவர் என கூறிக்கொண்டு மாய்மாலம்பண்ணும் மக்களை குறித்து என்ன சொல்லுகிறது? நிச்சயமாக அவர்களும் இந்த பொல்லாத விபசார சந்தியாரே.

61. கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி, நித்தியகாலமாய் தேவனுடைய சிந்தனையிலிருந்து அதன் அங்கத்தினர்கள் குறிப்பிட்டக்காலங்களில் மாம்சத்தில் வெளிப்பட்டனர். மணவாட்டி என்று அவர்கள் பெண்பாலில் அழைக்கப்படுகிறது மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவுக்குள் முன்குறிக்கப்பட்டு, நித்தியகாலமாய் அவரோடே கூடஇருந்து, அநேக அங்கத்தினர்களை கொண்ட சரீரமாக, தேவனின் தன்மைகளை

வெளிப்படுத்துகிறபடியினால் அவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுகிறனர். ஒருவன் தன்னை கிறிஸ்துவன் என்று அழைத்துக்கொள்வதினால் கிறிஸ்தவன் ஆகிவிடமுடியாது. கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல (ரோ 8 : 9)..

62. இயேசு கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை தெரிந்துக்கொள்ளுகிறார். மனவாளன்தான் ஒரு பெண்ணை விவாகத்திற்கென்று தெரிந்துக்கொள்கிறான். பாருங்கள், நீங்கள் என்னை தெரிந்துக்கொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்துக்கொண்டேன் என்கிறார். (யோ 15 : 16) கிறிஸ்துவின் மணவாட்டி உலகத்தோற்றத்திற்கு முன்பே அவருக்குள் தெரிந்துக்கொள்ளப்பட்டவள். மணவாட்டியின் தெரிந்துக்கொள்ளுதலை தேவன் தீர்மானிக்கின்றார். (எபே 1 : 10, ரோ 9 : 11) தேவன் தம்முடைய சித்தத்தின்படி மணவாட்டியை தெரிந்தெடுக்கத் தமக்குள் தீர்மானித்திருந்தார். அவர் நித்தியமாயிருப்பதினால் உலகத்தோற்றத்திற்கு முன்பு அது தீர்மானிக்கப்பட்டது. அவர் நித்தியஆவியாகயிருப்பதால் மணவாட்டி அவருடைய சிந்தையிலிருந்தாள். அவருடைய சிந்தையும் நித்திமாயிருக்கிறது.

63. இப்பொழுது பாருங்கள், இதோ இங்கே உங்கள் இரண்டு புத்தகங்கள். அவைகளில் ஒன்று ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகம். உங்கள் பெயர் அதில் எழுதப்பட்டு முன்குறிக்கப்பட்டுள்ளது. அது அதிலிருந்து போய்விடமுடியாது. அதை யாரும் எக்காரணத்தைக்கொண்டும் எடுத்துப்போடமுடியாது. ஏனென்றால் அது அங்கிருக்கவேண்டுமென்று தேவனால் முன்குறிக்கப்பட்டுள்ளது. அது கிறிஸ்துவின் மணவாட்டியின் பெயர்களை கொண்டுள்ளது. அவர் எக்காரியத்தைக்குறித்தும் புதிய சிந்தையுடையவரல்ல. ஏனென்றால் அவருடைய சிந்தைகள் ஆதிமுதல் அந்தம் வரை மாறாதவைகளாயிருக்கின்றன. தேவனுடைய சிந்தைகள் நித்தியமாயிருக்கின்றன. இவர்கள் ஏழுசபை காலங்களிலும் அந்தந்த காலத்திற்குரிய தூதனுடைய செய்தியில் நிலைத்திருந்து அவன் கொடுக்கும் செய்தியை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடத்து கனிக்கொடுக்கிறவர்களாக இருப்பதற்கு மணவாட்டியாக முன்குறிக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவின் மணவாட்டிதான் அந்தந்த காலத்திற்குரிய செய்தியில் நிலைத்திருந்து கனிக்கொடுகிறவர்களாயிருப்பார்கள். ஆதலால் இவர்கள் பெயர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் காணப்படுகிறது. ஆதலால் இக்காலத்திற்குரிய செய்தியை நிராகரிப்பவர்களின் பெயர்கள் ஆட்டிக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் காணப்படாது. அது விசுவாசிகளாக இருந்தாலும் சரி, ஊழியக்காரர்களாக இருந்தாலும் சரி. திருத்துவ ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் இடமே இல்லை

64. ஆனால் ஜீவபுத்தகத்திலிருந்து ஒருவனுடைய பெயர் எந்தநேரத்திலும் எடுத்துப்போடப்படலாம். நீங்கள் மனந்திரும்பாமற்போனால் அது எப்படியும் எடுக்கப்பட்டுவிடும். ஏனென்றால் நீங்கள் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும். ஆனால் மணவாட்டிக்கு நியாயத்தீர்ப்பு இல்லை. அவள் எடுத்துக்கொள்ளப்படுதலில் செல்லுகிறாள். பெரிய வெள்ளை சிங்காசனநியாயத்தீர்ப்பு வேளையில் புத்தகங்கள், ஜீவபுத்தகம் திறக்கப்பட்டது. ஆனால் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுத்தகம் அங்கு திறக்கப்படவில்லை. ஏனென்றால் அதில் எழுதப்பட்டுள்ள கிறிஸ்துவின் மணவாட்டி ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டு, அவருடைய சிங்காசனத்தில் அவருடைய மணவாட்டியாக உட்கார்ந்திருக்கிறாள்.

65. ஜீவபுத்தகம் பரலோகத்தில் வைக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பின்போது காணப்படும். பாருங்கள் மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்க கண்டேன் அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுத்தகம் என்னும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்கு தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். ஜீவபுத்தகத்திலே எழுதப்பட்டவானாக காணப்படாதவன் எவனோ அவன் அக்கினி கடலிலே தள்ளப்பட்டான் (வெளி 20 : 12,15)

66. உலகத்தோற்றத்திற்கு முன்னால் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தக்கத்தில் பெயர் எழுதப்பட்ட ஒரு சாரார் உண்டு. அவர்கள் பெயர்கள் எக்காரணத்தைக்கொண்டும் அதிலிருந்து அகற்றப்படுவதில்லை என பார்த்தோம். ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி. அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கடைகிறார்கள். ஆனாலும் அதே நேரத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னால் ஜீவ புத்தகத்ததில் பெயர் எழுதப்பட்ட வேறொரு சாராரும் உண்டு. அவர்கள் பெயர் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். அவ்வாறாக பெயர்கள் அகற்றப்படுவதற்கு சில எடுத்துக்காட்டுகளை நாம் இங்கு காண்போம்.

67. யாக்கோபின் 12 குமாரர்கள் : 1. ரூபன். 2. சிமியோன் 3. லேவி 4. யூதா 5. இசக்கார் 6. செபுலோன் 7 யோசேப்பு 8. பென்யமீன் 9. தாண் 10. நப்தலி 11. காத் 12. ஆசேர் (ஆதி 35 : 22-26) யாக்கோபின் 12 குமாரர்களின் சந்ததிகளும் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களாயின. அடுத்து யோசேப்புக்கு பதிலாக அவனுடைய குமாரர் எப்பிராயீம் மற்றும் மனாசே பெயர்களினால் சந்ததிகள் உண்டாகி, மொத்தம் 13

கோத்திரங்கள் இஸ்ரவேலில் உண்டாயின. 1. ரூபன். 2. சிமியோன் 3. லேவி 4. யூதா 5. இசக்கார் 6. செபுலோன் 7. எப்பிராயீம் 8. மனாசே 9. பென்யமீன் 10. தாண் 11. நப்தலி 12. காத் 13. ஆசேர். இதன்பின் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தைவிட்டு வெளியே வந்தபிறகு, வனாந்திரத்தில் ஆசரிப்பு கூடாரத்தை அமைக்க தேவன் கட்டளையிட்டார். லேவி கோத்திரத்தார் தேவனுடைய ஆசாரிய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டு, லேவி இதர 12 கோத்திரங்களுக்கு பணிவிடைசெய்தான். இதை நீங்கள் எண் 10 : 11-28 வசனங்களில் தியானிக்கலாம். ஆனால் இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைப்போடப்பட்ட 1,44,000 பேர் (வெளி 7 : 4) 1. யூதா 2. ரூபன் 3. காத் 4. ஆசேர் 5. நப்தலி 6. மனாசே 7. சிமியோன் 8. லேவி 9. இசக்கார் 10. செபுலோன் 11 யோசேப்பு 12. பென்யமீன் கோத்திரங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டனர் (வெளி 7 : 5 -8)

68. பாருங்கள், முத்திரைப்போடப்பட்டவர்களில் தாண்,எப்பிராயீம் கோத்திரங்கள் நீக்கப்பட்டுள்ளன. லேவி மற்றும் யோசேப்பு மீண்டும் புகுத்தப்பட்டுள்ளன. தாண் மற்றும் எப்பிராயீம் கோத்திரங்கள் ஏன் அகற்றப்பட்டன? நாம் எகிப்து தேசத்தில் குடியிருந்ததையும், நாம் கடந்துவந்த இடங்களிலிருந்த ஜாதிகள் நடந்துவந்ததையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அவர்களுடைய அருவருப்புகளையும் அவர்களிடத்திலிருந்த மரமும் கல்லும் வெள்ளியும், பொன்னுமான அவர்களுடைய நரகலான தேவர்களையும் கண்டிருக்கிறீர்கள். ஆனாலும் அந்த ஜாதிகளின் தேவர்களை சேவிக்கபோகும்படி, இன்று நம்முடைய தேவனாகிய கர்த்தரைவிட்டு அகலுகிற இருதயமுள்ள ஒரு புருஷனாகிலும், ஸ்திரீயாகிலும், குடும்பமாகிலும், கோத்திரமாகிலும் உங்களில் இராதபடிக்கும், நன்மையும், எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில்இராதபடிக்கு பாருங்கள். அப்படிபட்டவன் ஆணையுறுதியின் வார்த்தைகளைகேட்டும், தாகத்தின் நிமித்தம் வெறிக்ககுடித்து மனஇஷ்டப்படி நடந்தாலும் எனக்கு சுகமுண்டாயிருக்கும் என்று தன் இருதயத்தை தேற்றிக்கொண்டால் கர்த்தர் அவனை மன்னிக்க சித்தமாயிரார். அப்பொழுது கர்த்தரின் கோபமும், எரிச்சலும் அந்த மனிதன் மேல் புகையும் : இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவன் மீது தங்கும். கர்த்தர் அவன் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு குலைத்துப்போடுவார் (உபா 29 : 16 - 20) விக்கிரகாராதனை அல்லது ஆவிக்குரிய விபசாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு சாபம் தான் இதன் மூலம் அளிக்கப்படுகிறது. அப்படியெனில் விக்கிரகங்களை ஆராதித்த கோத்திரங்களின்பெயர்கள் இக்காரணத்தினால் அகறப்பட்டன. அப்படியே ஆவிக்குரிய விபசாரம் செய்பவர்களின் பெயரும் எடுத்துப்போடப்படும்.

69. யெரொபெயாம், ராஜ்யபாரம் தாவீது வம்சமாய் திரும்புகிறதாயிருக்கும், இஸ்ரவேல்ஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளை செலுத்தப்போனால், அவர்கள் இருதயம் யூதாவின் இராஜாவாகிய ரெகொபெயாம் வசமாய் திரும்பிவிடும் என யோசனைப்பண்ணி, பொன்னினால் இரண்டு கன்று குட்டிகளை உருவாக்கி, ஜனங்களை பார்த்து : நீங்கள் எருசலேமிற்கு போகிறது உங்களுக்கு வருத்தம் : இஸ்ரவேலரே, இதோ இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, ஒன்றை பெத்தேலிலும், ஒன்றை தாணிலும் ஸ்தாபித்தான். இந்த காரியம் பாவமாயிற்று. ஜனங்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காக தாண் மட்டும் போவார்கள். தியானியுங்கள் 1 இரா 12 அதி 25 - 33 : எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான். அவனை போகவிடு (ஓசியா 4 : 17) விக்கிரங்களை வணங்கும் கோத்திரத்தின் பெயரை வானத்தின் கீழ் இராதபடிக்கு கர்த்தர் குலைத்து போடுவார் ( உபா 29 : 20) இஸ்ரவேல் ஜனங்கள் இப்பொழுது பாலஸ்தீனா சேர்ந்துவிட்டார்கள். அவர்களில் 1,44,000 பேரை கர்த்தர் முத்திரை போடுகிறார். தாண், எப்பிராயீம் கோத்திரங்களை கர்த்தர் அவர் வாக்கின்படி குலைத்து போட்டதால் அவர்களை சேர்ந்தவர்கள் முத்திரைபோடப்பட்ட தொகையில் காணப்படவில்லை.

70. ஜீவபுத்தகத்திலிருந்து பெயர் அழிக்கப்படத்தற்கு இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரமே ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. எகிப்தை விட்டு இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழாக வெளிவந்தனர். எல்லாரும் சிவந்த சமுத்திரத்தை கடந்து ஞானஸ்நானம் பெற்றனர். எல்லாரும் மகத்தான அற்புதங்களால் அநுகூலம் அடைந்தனர். எல்லாரும் மன்னாவை புசித்தனர். எல்லாரும் கன்மலையின் தண்ணீரை குடித்தனர். வெளித்தோற்றமுள்ள ஆசீர்வாதங்களையும் அற்புதங்களையும் எல்லாரும் சமமாக பங்குகொண்டனர். மோவாபியரின் எல்லைக்குள் அவர்கள் வந்தபோது பெரும்பாலானோர் பாகால்பேயோரின் பண்டிகையில் கலந்துக்கொண்டு தேவனுடைய வார்த்தையை புறக்கணித்ததின் நிமித்தம் மாண்டுபோனார்கள். அவர்கள் சவங்கள் வனாந்திரத்தில் விழுந்துக் கிடந்தன. தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்து அதை மறுதலிக்கிறவர்களுக்கு இரட்சிப்பு இல்லையென எபி 6 : 1-9 வசனங்களில் தியானிக்கிறோம். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களின் பெயர்கள் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும்.

71. வேதவசனங்களில் சிலவற்றை மாத்திரம் நீங்கள் ஏற்றுக்கொண்டு , மற்றவைகளை விட்டுவிட முடியாது. வேதாகமம் போதிக்கும் அனைத்து உபதேசங்களையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய

விஷயங்களில் முற்றிலுமாக ஈடுப்படுபவர்களாக காணப்படும் அநேகர் உண்டு. ஆனால் அவர்கள் எல்லாரும் யூதாசை போன்று இருக்கின்றனர். யூதாசை குறித்து இயேசுவை தவிர வேறுயாரும் அறிவிவில்லை. ஒரு நாள் இஸ்ரவேலர் பாகால்பேயோரில் செய்ததையே யூதாசும் செய்தான். அவன் பணத்திற்கும் அரசியலுக்கும் முக்கியதுவம் கொடுத்து, இயேசுவுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் விரோதமாயிருந்த ஸ்தாபனசபைகளோடு சேர்ந்தான். கடைசியில் ஏமாற்றம்அடைந்தான். தற்கொலை செய்துகொண்டான். யூதாஸ் இயேசுவை மறுதலித்தபோது அவனுடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. (வெளி 22 : 19) யூதாஸ் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய பரமரகசியங்களை அறிந்திருந்தான். வல்லமையான ஊழியம் அவனுக்கு அளிக்கப்பட்டது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவன் பிணியாளிகளை சுகப்படுத்தினான், பிசாசுகளை ஓட்டினான். ஆனால் கடைசியில் பணத்திற்காகவும், ஆதிகத்திற்காகவும் இயேசுவை விற்றுப்போட்டான். அவன் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பே இறந்துவிட்டதால், பரிசுத்த ஆவியை பெறவில்லை. அவன் வார்த்தையில் கடைசிவரை நிலைநிற்க முடியாமற்போயிற்று. ஆம், பரிசுத்த ஆவியின் நிறைவுப்பெற்று, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவனே முடிவுபரியந்தம் வசனத்தில், கிறிஸ்துவுக்குள் நிலைநிற்பான். அதுவே பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளம். யூதாசை போன்று ஆயிரக்கணக்கானோர் இதில் தோல்வியடைகின்றனர். அதன் காரணமாக அவர்கள் பெயர்கள் ஜீவபுத்தகத்திலிருந்து எடுக்கப்படுகின்றன.

72. ஜீவபுத்தகத்திலிருந்து பெயர்கள் அழிக்கப்படுகின்றன என்பதற்கு மற்றொரு ஆதாரமாக மோசே ஜனங்களை நோக்கி : நீங்கள் மகா பெரிய பாவம் செய்தீர்கள் : உங்களுக்கு பாவநிவர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு திரும்பிபோய் : ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்கு தெய்வங்களை உண்டாக்கி மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆனாலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால்மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புத்தகத்திலிருந்து என் பெயரை கிறுக்கிப்போடும் என்றான். அப்போது கர்த்தர் மோசேயை நோக்கி : எனக்கு விரோதமாக பாவம் செய்தவன் எவனோ அவன் பேரை என் புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன் என்றார் (யாத் 32 : 30 - 34) ஜீவபுத்தகத்திலிருந்து முன்பும் பெயர்கள் கிறுக்கப்பட்டன. இன்றும் இனியும் அவ்வாறாகவே கிறுக்கிப்போடப்படும் என்பது தெளிவு. மேலும் சங் 69 : 21 - 28 வசனங்களை தியானித்தால் அங்கும் ஜீவபுத்தகத்திலிருந்து பெயர்கள் கிறுக்கப்படுவதை காண்கிறோம்.

73. சீஷர்களின் நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதாக இயேசு கூறினார். அவர்கள்பேர் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என இயேசு 70 சீஷர்களுக்கு கூறுகிறார் (லூக் 10 : 17 - 24) யூதாஸ் பன்னிருவரில் ஒருவனாக இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை துரத்தினான். ஆனால்அவன் பிசாசு, கேட்டின் மகன். ஏனென்றால் இயேசு உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார் (யோ 6 : 70, 71) வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை என்றார் (யோ 17 : 12) யூதாசை இயேசு தெரிந்துக்கொண்டாலும் அவன் சுத்தமாயிருக்கவில்லை. (யோ 13 : 18, 10, 11) பாருங்கள் பிதாவானவர் யூதாஸை இயேசுவுக்கு கொடுத்தார். (யோ 17 : 12) யூதாஸ் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, அழிவுக்கென நியமிக்கப்பட்டான் (1 பேதுரு 2 : 8) அவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள். அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். யுதாஸ் என்பவன் தனக்குரிய இடத்திற்கு போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் (அப் 1 : 24) என்று வேதம் கூறுகிறது. பிசாசான யூதாஸ் தேவனால் அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் ஊழியத்தை இழந்து, தற்கொலை செய்துக்கொண்டு தனக்குரிய இடத்திற்கு சென்றான். அவனுடைய பெயரும் ஜீவபுத்தகத்தில் உண்டாயிருந்தது. ஆனால் பின்பு அகற்றப்பட்டது.

74. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் உண்மையாக தேவனை வழிப்பட்ட யூதமார்க்கத்தாரின் பெயர்களும் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் அவரை உண்மையோடும், தேவனுடைய வார்த்தையின்படியும் தொழுதுகொள்ளவில்லை. ஆதலால் அவர்கள்பெயர்கள் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்பட்டன.

75. இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (மாற் 12 : 30) உன்னை அடிமைத்தனவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படபண்ணின உன்தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்களை உண்டாக்க வேண்டாம் (யாத் 20 : 2, 3) நான் முந்தினவரும், நான் பிந்தினவரும் தானே : என்னை தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் இராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார் (ஏசா 44 : 8) நானே தேவன் வேறொருவரும் இல்லை (ஏசா 45 : 22) நானே தேவன், வேறொருவரும் இல்லை : நானே தேவன், எனக்கு சமானமில்லை (ஏசா 46 : 9) நானே கர்த்தர், வேறொருவரில்லை : என்னை தவிர தேவனில்லை. என்னை தவிர வேறொருவருமில்லை என்று சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமனமாகிற திசையிலும் அறியப்படும். நானே கர்த்தர்,

வேறொருவரில்லை (எசா 45 : 6) இந்த தேவனை குறித்து அப். பவுல் : தேவன் யூதருக்கு மாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவன் அல்லவா? ஆம், புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான். விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும் (இஸ்ரவேலர்) விருத்தசேதனமில்லாதவர்களை (புறஜாதி) விசுவாசத்தின் மூலமாகவும் நீதிமானாக்குகிற தேவன் ஒருவரே என்கிறான் (ரோ 3 : 29, 30).

76. இந்த தேவன் காலம் நிறைவேறினபோது (கலா 4 : 5) மாம்சத்தில் வெளிப்பட்டார். ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். இது தேவபக்திக்குரிய ரகசியம்( 1 தீமோ 3 : 16) இவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள் (மத் 1 : 25) இவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (லூக் 2 : 11) தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலொ 2 : 9) பாருங்கள் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும் (பிதாஸ்தானத்தில்) அவர் எல்லாரோடும் (குமாரன் ஸ்தானத்தில்) அவர் எல்லாருக்குள்ளும் (பரிசுத்த ஆவி ஸ்தானத்தில்) இருந்தார், இருக்கிறார். தியானியுங்கள் எபே 4 : 5, 6. ஆக தேவன் ஒருவரே. அவர் தம்மை பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற மூன்று நிலைகளில் மனுமக்களுக்கு வெளிப்படுத்தினார்.

77. அடுத்து மோசேக்கு கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜீவாலையிலேநின்று அவனுக்கு தரிசனமானார். மோசே அந்த அற்புத காட்சியை காண கிட்ட வருகிறதை கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை மோசே, மோசே என கூப்பிட்டார் (யாத் 3 : 1-4) பாருங்கள் **கர்த்தருடைய தூதன், கர்த்தர், தேவன் ஒருவரை குறிக்கிறதேயன்றி மூவரையல்ல. மூன்று பேர்கள் மோசேக்கு தரிசனமாகவில்லை.** பின்னும் பாருங்கள், அவர் மோசேயிடம் நான் ஆபிரகாமின்தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார் (யாத் 3 : 6) பின்னும் மோசேயிடம் தம்மை இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன் என்றார் (யாத் 3 : 14) மேலும் தேவன் மோசேயை நோக்கி : நான் யேகோவா. யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு அறியப்படவில்லை என்றார்(யாத் 6 : 3) ஏசாயா கர்த்தராகிய யோகோவா நித்திய கன்மலையாய் இருக்கிறார் என்கிறான் (ஏசா 26 : 4). அந்த கன்மலை கிறிஸ்து என பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறான். (1 கொரி 10 : 4)

78. முடிவாக அப். பவுல், மோசேயோடு இடைப்பட்ட இந்த தேவன் கிறிஸ்து என எபி 11 : 8, 1 கொரி 10 : 8 - 11, எண் 21 : 5-9 வசனங்களில் திருஷ்டாந்தப்படுத்துகிறான். பேதுரு : இயேசு கிறிஸ்துவே தேவனும் இரட்சகரும், கர்த்தரும் இரட்சகரும் என 2 பேதுரு 1 : 11 வசனங்களில் அழைக்கிறான். ஆக பழைய ஏற்பாடு யேகோவா புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து என பவுல் திருஷ்டாந்தப் படுத்துகிறான். நாமோ அப்போஸ்தலர்கள் மூலமாக கேட்ட சுவிசேஷத்தில் அசையாமல் ஸ்திரமாகவும், உறுதியாகவும் நிலைத்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனென்றால் அவர்கள் உபதேசத்தின் மேல் நாம் கட்டப்பட்டிருக்கிறோம். (எபே 2 : 20). நாம் ஸ்தாபனசபை உபதேசங்களின் மேல் கட்டப்படவில்லை.

79. பாருங்கள் இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள்யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தேவன் அவருக்கு தந்தருளினார் என பிலி 2 : 9 - 11 வசனங்களில் வாசிக்கிறோம். இப்பொழுது கவனியுங்கள் நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறேதேவன் இல்லை : என்னை தவிர வேறொருவரும் இல்லை. நானே தேவன், வேறொருவருமில்லை. முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன் : இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது : இது மாறுவது இல்லை என்கிறார் (ஏசா 45 : 21 - 23) பாருங்கள் ஆணைக்குட்பட்டவரும், ஆணையிட்டவரும் ஒருவரேயன்றி இருவரவல்ல. மேலும் பாருங்கள், கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். (ஏசா 53 : 1, 4, 6, 10) பாருங்கள் நம்முடைய பாடுகளை சுமந்தவரும் அவரை பாடுகளுக்குட்படுத்தினவரும் ஒருவரேயன்றி இருவரல்ல. இதுதான் பிதாவுக்கும் குமாரனுக்குரிய இரகசியம். பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள இந்த ஐக்கியத்தை மறுதலிக்கிறவனே அந்திக் கிறிஸ்து. (1 யோ 2 : 22, 23) திருத்துவத்தை உபதேசிக்கிற, விசுவாசிக்கிற அனைவரும் அந்திக்கிறிஸ்துக்கள்.

80. இவ்வாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஒன்றான மெய்தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார் என அநேக எடுத்துக்காட்டுகளை வேதவாக்கியங்களிலிருந்து உங்களுக்கு கொடுக்கமுடியும். காரியங்கள் இப்படியிருக்க, தேவத்துவத்தை மூன்றுகூறுகள்போட்டு திருத்துவம் எனவும், இரண்டு கூறுகள்போட்டு இருத்துவம் எனவும் பலவிதமான துர்உபதேசங்களை கொண்டு மக்களின் விசுவாசத்தை சீர்குலைக்கும்

ஸ்தாபனசபைகளின் ஊழியக்காரர்கள் மற்றும் திருத்துவ, இருத்துவ உபதேசங்களை செய்யும் அனைவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும், அகற்றப்படும், எடுத்துப்போடப்படும். ஏனென்றால் தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களில் தேவத்துவத்தில் திருத்துவம் (மூன்று பேர்) இருத்துவம் (இரண்டு பேர்) என்ற உபதேசங்களுக்கு ஆதாரமில்லை / இடமில்லை. ஆனால் இந்த உபதேசத்திற்கு ஸ்தாபன சபைகளில் மாத்திரமே இடம் உண்டு. ஏனென்றால் அது சாத்தானால் ஆண்டுகொள்ளப்பட்டு வழிநடத்தப்பட்டுவருகிறது. ஸ்தாபன சபைகள் யாவும் பிசாசின் பிடியில் இருக்கிறது. ஆதலால் அவர்களின் பிஷப் / தலைவர்கள் நீதிமன்ற கூண்டுகளில் பணமோசடி குற்றச்சாட்டுகளில் நிற்கிறார்கள்.

81. இரண்டாவதாக நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை (அப் 4 : 12) இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான் (அப் 10 : 43) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற் 16 : 15) நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புகென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப் 2 : 38) இவ்வாறாக ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களையே கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப் 2 : 47) என்ற ஞானஸ்நானத்திற்கு அடுத்த அடிப்படை உபதேசங்களை நிராகரித்து, பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து (பிதா குமாரன் பரிசுத்த ஆவியினுடைய நாமத்தினால் அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் கொடுக்காது) ஞானஸ்நானம் கொடுக்கும் லவோதிக்கேயா சபை காலத்திற்குரிய ஊழியக்காரர்கள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும். ஏனென்றால் இவர்கள் ஒரு ஆத்துமா தன் இரட்சிப்பை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற அனுமதிக்காது தடைப்பண்ணுகிறார்கள். தகாதவைகளை உபதேசித்து, முழு குடும்பத்தையும் கவிழ்த்து போடுகிறார்கள்.

82. இந்நாட்களில் ஒரு ஆவிக்குரிய சகோதரன் மூலமாக நான் அறியவந்ததாவது : நீலகிரி மாவட்டத்தில் நாங்கள் மணவாட்டி, நான் ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டர் என பேசுபவர்கள் சபையில் ஒரு சகோதரனுக்கு வயது 34 / 35 க்கு மேல் ஆகிவிட்டது. திருமணம் ஆகவில்லை. இந்நிலையில் சபைக்கு மிக்க ஏழ்மையான குடும்பத்தினர் திருமணம் செய்ய கூடிய வயதில் மூன்று பெண்களுடன் வந்து ஐக்கியம் கொண்டனர். மூத்த பெண்ணுக்கு சுமார் 20 வயது இருக்கலாம். இந்த பெண்ணை அந்த 34 வயது சகோதரனுக்கு விவாக மனைவியாக முடித்து வைப்பதாக நல்லாலோசனை கூறி பாஸ்டர் அவரிடமிருந்து ஒரு தொகையை சுமார் 20000/- பெற்றதாக தெரிகிறது. திருமண நாள் முடிவு செய்யப்பட்டது. திருமணத்திற்கு 4/5 தினங்களுக்கு முன் அந்த பெண், அந்த வயதுள்ள சகோதரனை திருமணம் செய்ய விரும்பாமல் தன் வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டாள். அந்த பெண் பின் தன் வீட்டிற்கு விபரம் தெரிவித்து, காவல்துறையிலும் புகார் செய்துள்ளாள். பாஸ்டர் அந்த பகுதியில்- மிக்க பழமையான நபர். கூடியமட்டும் பெரிய புள்ளிகளை தெரிந்துவைத்துள்ளார். ஆதலால் காரியத்தை மூடிமறைத்துவிட்டார். இதன் பிறகு இந்த மாப்பிள்ளை சகோதரன் பாஸ்டரிடம் தான் கொடுத்த பணத்தை திருப்ப கேட்டுள்ளார். பாஸ்டர் உடனே அந்த பெண்ணின் பெற்றோரை மிரட்டி அவர்களது இரண்டாவது பெண்ணை இருபதுக்கு கீழ் சுமார் 18 வயதுள்ள பெண்ணை அந்த நபருக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார். அந்த பெண் சில விசுவாச சகோதரரிடம் நமது பாஸ்டர் என் தகப்பனாரை நிர்ப்பந்தப்படுத்தினார். என் தகப்பனார் நான் அந்த நபரை திருமணம் செய்யாவிட்டால், குடும்ப வறுமையின் நிமித்தம் தற்கொலை செய்து கொள்வேன் என்றார். ஆதலால் நான் சம்மத்திதேன் என்று கூறினாளாம். இப்படியாக இக்காலத்திற்குரிய செய்தியை பிரசங்கிக்கிறோம் என கூறும் பாஸ்டர்கள் இருக்கிறார்கள். நிச்சயமாக இவர்கள் உங்களை நித்தியத்திற்குள் வழிநடத்தமுடியாது. ஆதலால் இவருடைய சபையில் ஐக்கியம் வைத்துக் கொள்ளாதீர்கள். அவரை விட்டு விலகுங்கள். இப்படிபட்ட பாஸ்டர்களின் பெயர்கள் நிச்சயமாக ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். (மத். 7 : 20)

83. முதல் கட்டிய மனைவி உயிரோடிருக்கும்போது, இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டு ஒரு விபசார வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டு, கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தன்னை பாஸ்டராக நியமித்தார் என கூறும் மாய்மாலக்காரர்கள் பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து எடுக்கப்படும். ஏனென்றால் தேவன் இவர்களை ஏற்படுத்தவில்லை. தேவன் தம்முடைய வார்த்தையில் இருக்கிறார்.

84. தந்தை தாய் என்ற ஸ்தானத்திற்கு வந்து குழந்தை பாக்கியங்களுடன் இல்லறவாழ்க்கை நடத்தாமல் கணவன் மனைவி என்ற நிலையிலிருந்து தன் வாழ்நாட்களில் வாழ்வடையாதவன் (எரே 22 : 20, உபா 7 : 14, பாருங்கள் கர்த்தர் அவன் வீட்டை கட்டாத நிலையில் (சங் 127 : 1) கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அதாவது ஐந்து வகை ஊழியங்களில் பாஸ்டர் ஊழியத்தை (எபே 4 : 13) எனக்கு கொடுத்திருக்கிறார் என கூறி வேதவாக்கியங்களை புரட்டி அவைகளுக்கு தவறான அர்த்தங்களை கொடுத்து மக்களை மோசம் போக்குகிற

ஊழியக்காரர்கள் யாவருடைய பெயரும் ஜீவபுத்தகத்தலிருந்து கிறுக்கப்படும்.

85. எனக்கு ஒரு பாஸ்டர் நன்கு தெரியும். அவருக்கு குழந்தை பாக்கியங்கள் கிடையாது. வேதவாக்கியங்களின் அடிப்படையில் அவர் பாஸ்டர் ஊழியம் செய்ய தகுதியற்றவர். குழந்தைகள், அதாவது பிள்ளைகள் இல்லாதவர்கள் பாஸ்டர் ஊழியம் செய்யக்கூடாது / முடியாது என பல செய்தி தொகுப்புகளில் எழுதி வந்தேன். நான் என்றுமே அவரை நேருக்கு நேராக குற்றப்படுத்தவில்லை. ஆனால் செய்தி தொகுப்புகளில் வரும் தேவனுடைய வார்த்தை அவர் உள்ளத்தில் குத்த ஆரம்பித்தது. அவர் மனந்திரும்புதலுக்கு பதிலாக என்னை பகைக்க ஆரம்பித்தார். ஆனால் நானோ அவரிடம் இன்று வரை அன்பு செலுத்தி வருகிறேன். பாருங்கள் ஒரு பாஸ்டர் தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக கீழ்படியப்பண்ணுகிறவனாக இருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் என 1 தீமோ 3 : 4 ல் வாசிக்கிறோம். ஒரு பாஸ்டர் மனைவி, மக்களையுடைய ஒரு குடும்பஸ்தனாக இருக்கவேண்டும். தேவனுடைய சபையை நடத்த குடும்ப அனுபவம் தேவை. சபையானது விசுவாசிகளின் ஐக்கியம். இந்த ஐக்கியம் ஒரு குடும்பம். ஆதலால் சபையை நடத்த ஒரு பாஸ்டருக்கு குடும்ப அனுபவம்தேவை. பாருங்கள் கணவனும் மனைவியும் சேர்ந்து ஒரு குடும்பம் ஆகிவிட முடியாது. தகப்பன், தாய் மற்றும் பிள்ளைகள் சேர்த்ததே ஒரு குடும்பமாகிறது (Family is a social unit consisting of parents and their children.) இதுவே ஆங்கில அகராதியில் குடும்பத்திற்கு கொடுக்கப்படும் விளக்கம். பாருங்கள் கர்ப்பத்தின் கனி, கர்த்தரால் கிடைக்கும் பலன் (சங் 127 : 4) நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளை காண்பாய் என சங் 128 : 6 ல் வாசிக்கிறோம். இதோ கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் இவ்விதமாக ஆசீர்வதிக்கபடுவான் என சங் 128 : 4 ல் தியானிக்கிறோம். அப்படியானால் கர்த்தருக்கு பயப்படுகற ஒரு மனுஷன் குழந்தை பாக்கியத்தோடு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவானாக இருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள்ளானவர்கள், ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்தை உடையவர்கள். பாருங்கள் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் ஆணாகிலும் பெண்ணாகிலும் மலடு இருக்கமுடியாது (உபா 7 : 14) கிறிஸ்துவுக்குள்ளானவர்களுடைய ஆசீர்வாதத்தை பெறாத நிலையில், கர்த்தர் எப்படி தம்முடைய சரீரமாகிய சபையை பக்திவிருத்திக்குள் வழிநடத்த ஒரு குழந்தைபாக்கியமில்லாதவனை / திருமணம் ஆகாதவனை ஏற்படுத்துவார்? சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

86. சாராள் ஆபிரகாமை நோக்கி : நான் பிள்ளை பெறாத படிக்கு கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். என் அடிமை பெண்ணோடே சேரும், அவளால் என் வீடு கட்டப்படட்டும் என்றாள் (ஆதி 16 : 2) அவ்வண்ணமாகவே ராகேலும், இதோ என் வேலைக்காரியாகிய பில்காள் என் மடிக்கு பிள்ளைபெற அவளால் என் வீடு கட்டப்பட அவளிடம் சேரும் என யாக்கோபிடம் கூறினாள் (ஆதி 30 : 3) பாருங்கள் ஒருவனுடைய வீடு கட்டப்படாதபடிக்கு கர்த்தரே அவன் மனைவியின் கர்ப்பத்தை அடைக்கிறார். ஆனால் நாம் பலுகிப் பெருக ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் (ஆதி 1 : 28) பலுகி பெருகுங்கள் என ஆசீர்வதித்து, பின் கர்ப்பத்தை அவர் எப்படி அடைக்கமுடியும்? அப்படியானால் அதற்கு ஒரு காரணம் இருக்கும். ஆனாலும் நம்முடைய தேவன் மலடிகளை சந்தோஷமான பிள்ளைதாட்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிற தேவனாயிருக்கிறார் (சங் 113 : 9). ஆக பிள்ளைபாக்கியம் இல்லாத ஒருவன் தேவனுடைய சபையை விசாரிப்பவனானால் அவன் தேவசித்தத்திற்கு புறம்பாக ஒரு ஊழியத்தை தன் சுய இச்சையின்படி, இஷ்டத்தின்படி செய்கிறவனாயிருக்கிறான். தேவன் அவனை ஏற்படுத்தவில்லை. மேலும் திருமணம் செய்து கொள்ளாமல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஒருவன் கர்த்தர் என்னை ஏற்படுத்தினார் என கூறுவானானால் அவனும் பொய்யன். இவர்கள் இருவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும். ஏனென்றால் இவர்கள் தேவ நியமத்திற்கு மாறாக அவருக்கொன்று தங்களுடைய சுயஇச்சையின்படி ஊழியம் செய்கிறவர்கள்.

87. இன்னும் சிலர் இருஎஜமான்களுக்கு ஊழியம் செய்துக்கொண்டு, கர்த்தர் தங்களை தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டராக நியமித்திருக்கிறார் என பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை கூறி தன்னுடைய காரியங்களை நிர்வகித்து வருகிறார்கள். ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுக்காரர்களுக்கு குறைவு இருக்காது. இவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் அல்லது தனியார் கம்பெனிகளில் வேலை செய்துக்கொண்டு, பகுதிநேர ஊழியமாக ஐந்து வகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தை செய்கிறார்கள். இது என்ன? இவர்கள் தேவனுக்கும், அதே நேரத்தில் சாத்தானுக்கும், இருஎஜமான்களுக்கு ஒரே நேரத்தில் ஊழியம் செய்கிறார்கள். இரண்டு எஜமான்களுக்கு, அதாவது தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது என கர்த்தர் திட்டவட்டமாக கூறுகிறார் (மத் 6 : 24, லூக் 16 : 13) தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னை சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளகூடாது (2 தீமோ 2 : 4) இதன் அர்த்தம் என்ன? நீ உன்னை சேவகம் எழுதிக்கொண்ட இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விரும்பினால் உன்னை உன் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கவைத்துக்கொள்ளதே என்பதே. ஆனால் பணத்தாசையே எல்லாம் தீமைக்கும் வேராக

இருக்கிறது. பாருங்கள் இவர்களுக்கு ஒரு புறம் அரசாங்க ஊழியம், ஊதியம், ஓய்வூதியம் மறுபுறம் தேவனுக்கென்று ஒரு ஊழியம். அதில் தசமபாகம், காணிக்கை போன்ற பலவகையில் வருமானங்கள். நிச்சயமாக இவர்கள் தேவனுக்கென்று ஊழியம் செய்ய வராமல் ஊழிய ஊதியம் கொள்ளவே வந்தவர்கள். இவர்கள் விபசார மயக்கத்தால் நிறைந்தவர்களும், பொருளாசையை விட்டோயாத விக்கிரகாராதனைகாரர்களும், உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய் பிடித்து பொருளாசையில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகளுமாயிருக்கிறார்கள். இவ்வாறாக தேவனுடைய ஊழியத்தை ஆதாய தொழிலுக்காக செய்பவர்கள் மற்றும் தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்றுஒரு ஊழியம் செய்கிறவர்கள் நம் மத்தியில் அதிகம் அதிகம். உண்மையாகவே இவர்கள் யார்? ஒருபக்கம் தேவனை நேசிக்கும் இவர்கள் மறுபக்கம் சாத்தானையும் நேசிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆம் இவர்கள் தான் இந்த பொல்லாத விபசார சந்ததி. இவர்களுடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். பவுல் கூடாரம் பண்ணுகிய தொழிலாளியாக, ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியாருடன் சேர்ந்து அந்த வேலையை செய்துக் கொண்டுவந்தான் (அப். 18 : 3) பாருங்கள் தனக்காவும் தன்னுடனே கூட இருந்தவர்களின் தேவைகளுக்காக (அப் 20 : 34) பிறருக்கு மாதிரியாக (அப் 20 : 35) இருக்க தொழில் செய்தான். தொழில் அவன் ஊழியத்தை கட்டுப்படுத்தவில்லை, தடைசெய்யவில்லை.

88. கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியங்களுக்குரிய, கர்த்தருக்குரிய தசமபாகம் பாஸ்டருக்குரிய தசமபாகம் மாத்திரமல்ல. இதர நான்கு வகை ஊழியங்களுக்கும் பகிர்ந்துக்கொடுக்கப்படவேண்டும். ஐந்துவகை ஊழியங்கள் - இவர்கள் ஆசாரியர்கள். ஆதலால் ஐந்து வகை ஊழியங்களுக்குரிய கர்த்தருக்குரிய தசமபாகத்தை இதர ஊழியங்களுக்கு பகிர்ந்து கொடுக்காது தனது மடியிலே போட்டுக்கொள்ளும் பாஸ்டர்கள் பொருளாசைகாரர்களாகிய விக்கிரகாராதனைகாரர்கள். இவர்கள் செம்மையான வழியை விட்டு தப்பி நடத்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றி அநீதியின் கூலியை விரும்பி சுபபோகமாக வாழும் உயிரோடே செத்தவர்கள். ஆதலால் இவர்களுடைய நாமங்களும் ஜீவபுத்தகத்தலிருந்து எடுத்துப்போடப்படும்.

89. இன்னும் சிலர் தங்களுடைய நயவஞ்சக பேச்சியினால் மக்களை வசீகரித்து, ஊழியங்களின் பேரில்மக்களை ஏமாற்றி தங்களுக்கு சொத்து சுகங்களை சேர்க்கிறார்கள். நான் ஒரு சபையை அறிவேன். போதுமான இடம்இல்லாதால் கொஞ்சம் நெருக்கமாக அமர்ந்து ஜனங்கள் தேவனை ஆராதித்து வந்தார்கள். சமீபநாட்களின் நான் இந்த சபை நடபடிகள் குறித்து கேள்விபட்டதாவது : பாஸ்டர் சபையாரை நோக்கி : பாருங்கள் **இது தேவனுடைய சபை.** நீங்கள் தேவனுடைய பிள்ளைகள். தேவனை ஆராதிக்க நமக்கு போதுமான இடமில்லை. நாம் தற்போது ஆராதித்துவரும் எனது இல்லத்தின் ஒரு பகுதியை கொஞ்சம் விரிவுபடுத்தி, மேலே மாடி எடுத்து கட்டினால் நாம் நம்முடைய தேவனை மனமகிழ்ச்சியில் சூழ்நிலையிலிருந்து ஆராதிக்கலாம். நீங்கள் யாவரும் பணஉதவி செய்ய முன்வந்தால் நாம் வசதியாக அமர்ந்து தேவனை ஆராதிக்க இடஏற்பாடுகள்செய்யலாம் என கூறி இது தேவனுடைய சபை என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள் என மிக்க சாதூரியமாக பேசினார். இவருடைய பேச்சில் பலர் மயங்கினார்கள். உடனே ஒரு சகோதரன் நான் ரூ. 40000/- தருகிறேன் என்றார். இந்த பார்த்த அடுத்த சகோதரன் நான் ரூ. 60000/- கொடுக்கிறேன் என்றார். இன்னும் பலர் 5, 10 என சில ஆயிரங்கள் கொடுக்க முன்வந்தனர். ஒரு சகோதரன், சபை பாஸ்டரை தன் கம்பெனியில் மேனேஜராக வேலை செய்கிறார் என ஒரு பொய் சர்டிபிகேட் கொடுத்து அதன் மேல் ரூ. 100000/- வங்கில் கடன் வாங்கினார்கள். அவர் அதை கட்ட திரானியுள்ளவராகவே இருந்தார். ஏனெனில் சபையில் தசமபாக வரவு ஏறக்குறைய ரூ. 30, 40 ஆயிரமாக இருந்தது. சபை கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வளவுகாலம் தேவனுடைய சபை, தேவனுடைய சபை என கூறிவந்த பாஸ்டர் இப்பொழுது **நம்முடைய சபை** கட்டுமானம் முடியும் தருவாயில் இருக்கிறது. நம்முடைய சபை பிரதிஸ்டைக்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுமென கூறி **தேவனுடைய சபையை, நம்முடைய சபையாக** மாற்றினார். பின் ஒரு காலக்கட்டத்தில் ரூ. 40000/- கொடுத்த சகோதரனுக்கும், பாஸ்டருக்கும் இடையே பிரச்சனை வந்தது. பாஸ்டர் அந்த சகோதரனை நோக்கி : பாருங்கள் இது **என் சபை,** உங்களுக்கு எனக்கு அடங்கியிருக்கமுடியுமானால் இருங்கள் அல்லது என் சபையை விட்டு வெளியேறுங்கள் என கூற, அந்த சகோதரனும் வெளியே வந்தார். இப்படிப்பட்ட காரியங்கள்தான் தனிபட்ட நபர்கள் ஆரம்பிக்கும் சபைகளில் நடந்துவருகிறது. பாருங்கள் தொடக்கத்தில் **தேவனுடைய சபை,** மத்தியில் **நம்முடைய சபை,** பின் முடிவில் **என்னுடைய சபை.** இதுதான் இன்றைய தனியார் விடுதிகளின் நிலை. இப்படிப்பட்ட கள்ளகபடமுள்ள வேளையாட்கள் தேவனுக்கு பயப்படுகிறதுபோல நடித்து கபடமுள்ள இருதயத்தோடே ஊழியம் செய்து தங்களுக்கு ஆஸ்திகளை சேர்க்கிறார்கள். பொருளாசையுள்ளவர்களாய் மாய்மாலம் பண்ணுகிறார்கள். இவர்கள் தங்கள் இல்லங்களில் சபை கூடிவரசெய்து, பின் விசுவாசிகளிடமிருந்த பணம் பரித்து, தன் வீட்டை பழுதுபார்த்து, புதுபித்து அதாவது **சபை என்ற பெயரில் தன் வீட்டை அழகுபடுத்தும் தந்திரசாலிகள்.** தேவபக்தியை ஆதாயதொழிலாக எண்ணுபவர்கள். ஆதலால் இவர்கள் பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும். இது மிகவும் கொடிதான வஞ்சிப்பின் காலமாகயிருப்பதால் இவர்களுடைய வஞ்சக வலையில் அநேக விசுவாசிகள் விழுந்து தங்கள்

செல்வங்களை இழந்து போகிறார்கள்.

90. மறைந்த பாலாசீர் லாறி, நித்திரையடைந்த வில்லியம் மாரியன் பிரன்காம் போன்றவர்களை மனுஷகுமாரன், கிறிஸ்து என கூறி : மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். வெளி 1 : 18 என்ற வசனத்தை சகோ. பாலாசீர் படம் கீழும் : நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்(யோசு 24 : 15) என்ற வசனத்தைக்கொண்டு நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம் என்று பறைசாற்றும் ஓநாய் கூட்டங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைக் கொண்டு, பலவிதமான அந்நிய போதனைகளை கொண்டு மக்களை வஞ்சிக்கும் பொய்யர்கள் பெயர்கள் யாவும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். ஏனென்றால், தேவனுக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு செலுத்தவேண்டிய கனத்தையும், துதியையும், மகிமையையும் பாலாசிர்லாறிக்கும், பிரன்காமுக்கும் செலுத்தி சாத்தானுக்கு ஆராதனை செய்ய மக்களை திசைதிருப்பும் இவர்கள் கள்ளகபடமுள்ள வேளையாட்களே. ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கவேண்டும் (1பேதுரு 4 : 11). ஆனால் இவர்களோ தங்களுடைய பற்பல உபதேசங்களினால் விசுவாசிகளை மோசம் போக்குகிறார்கள்.

91. கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார். (அப் 1 : 8) அதோடு மட்டுமல்ல நீங்கள் புறபட்டுபோய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றார் (மத் 28 : 19) அப்போஸ்தலர்கள் பலலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் (1 பேதுரு 1 : 12) அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே அனுப்பப்பட்டார்கள். கல்லூரிகளையும், பள்ளிகளையும், மருத்துவமனைகளையும், தொழிற்சாலைகளையும் கட்ட அவர் அப்போஸ்தலர்களை அனுப்பவில்லை. இவைகள் யாவும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஊழியக்காரனுக்கடுத்த காரியங்கள் இல்லை. இவை அனைத்தும் நமது வாழ்க்கையில் அத்தியாவசியமான தேவைகள் தான். ஆனால் இந்த பணிகளுக்கு தேவன் வேறுநபர்களை வைத்திருக்கிறார். அவருடைய ஊழியக்காரர்களை இந்த பணிகளுக்கு அவர் நியமிக்கவில்லை.

92. இந்நாட்களில் ஒரு மனிதன் தன்னை தேவனுடைய ஊழியக்காரன் என அழைத்துக்கொண்டு, துணிகரமாக தேவனுக்கு விரோதமாக பொய்களை தூற்றித்திரிந்து, மக்களை ஏமாற்றி, இயேசு அழைக்கிறார், இயேசு அழைக்கிறார் என கூறி மக்களின் செல்வத்தை பகற்கொள்ளையடித்து, அதை தக்கவைக்க அரசியல்வாதிகளை தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டு நாடகம் ஆடி முடிவில் அகாலமரணமடைந்து, இந்நாட்களில் அவருடைய ஊழியமானது அவமாய் போய்க்கொண்டுவருவதை நீங்கள் அறிவீர்களா? இவருடைய பாணியில் இன்னும் பலர் செயல்பட்டு வருவதையும் காண்கிறேன். நிச்சயமாக இவர்கள் பெயர்கள் யாவும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். ஏனென்றால் பணத்தாசையே எல்லா தீமைக்கும் வேர். இவர்கள் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள். இப்பொழுது அநேக வேதனைகளினால் தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள். பாருங்கள் ஒருத்தருக்கு குழந்தை பாக்கியமே இல்லை. ஆதலால் அவர் ஊழியத்திற்கு தகுதியற்றவர்.

93. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பெண்களின் பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும். ஏனென்றால்இவர்கள் துணிகரமாக, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக தேவனுடைய வார்த்தையை கையாளுகிறார்கள், புரட்டுகிறார்கள். தேவனுடைய வார்த்தை இவர்களை பிரசங்கிக்க அனுமதிப்பதில்லை. இவர்கள் மார்க்கம் தப்பி அலையும் நட்சத்திரங்களாக இருக்கிறார்கள். ஸ்தாபன சபைகளில் பெண்கள் பிரசங்கிக்கவும் இன்னும் ஆசாரியனுக்கடுத்த சபை ஊழியங்களையும் செய்கிறார்கள். இவர்கள் போதகர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். பெண்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாது, கூடாது. ஏனென்றால் இவர்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த முடியாது( 1 தீமோ 2 : 12) இராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு (பிர 8 : 4 ) ஆதலால் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தும் இவர்கள் தங்கள் தலைமீது அதிகாரம் செலுத்துகிறார்கள். இவர்கள் தங்களது அளவை கடந்து மற்றவர்களுடைய வேலைக்குள் தங்களை உட்படுத்துகிறார்கள். அது கூடாது.

94. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தர் தன்னை ஒரு சபைக்கு பாஸ்டராக ஏற்படுத்தினார் என ஒருபுறம் கூறிக்கொண்டு, நான் சுவிசேஷஊழியம் செய்யப்போகிறேன் என கூறி ஊர்ஊராக, நாடுநாடாக சுற்றித்திரியும் நாடோடி மன்னர்கள் பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். ஏனென்றால் இவர்கள் ஊழியம் சுவிசேஷ ஊழியம் அல்ல. இவர்கள் சுவிசேஷகனுக்கும், பாஸ்டருக்கும் (மேய்ப்பன்) உள்ள ஊழிய வித்தியாசத்தை அறியாதவர்கள். தங்கள் அழைப்பை உறுதிப்படுத்த முடியாதவர்கள்.

பாஸ்டராக அழைக்கப்பட்ட ஒருவன் அந்த அழைப்பிலே நிலைத்து நிற்க வேண்டும். ஆனால் இவர்கள் தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் செய்யும் ஊழியம் தேவனால் அங்கிகரிக்கப்படாதது. பாருங்கள் ஒரு சுவிசேஷகனுக்கும் ஒரு பாஸ்டருக்கும் அடுத்த காரியம் சகோ. பிரன்காமுடைய செய்திகளை மொழிபெயர்த்து வெளியிடுவது அல்ல. அவர்கள் சகோ. கெர்ட்டின் **பில்டிங் ஸ்டோன்** செய்தி தொகுப்புகளை மொழிபெயர்ந்து வெளியிடுவது ஒரு சுவிசேஷனுடைய பணி அல்ல. சுவிசேஷகன் இதற்காக தேவனால் அழைக்கப்படவில்லை. அதற்கு தேவன் வேறு பிரத்தியேகமான மனிதர்களை வைத்திருக்கிறார். இவர்கள் கிறிஸ்துவின் சபை பக்திவிருத்திக்கடுத்த ஊழியக் காரியங்களில் மாத்திரமே ஈடுபடவேண்டுமேயன்றி செய்தி மொழிபெயர்ப்புகளிலும் அதை வெளியிடுவதிலும் ஈடுப்படக் கூடாது. இவர்களும் தங்கள் அழைப்பை உறுதிப்படுத்தமுடியாமல் தேவசித்தத்திற்கு புறம்பாக ஒரு ஊழியம் செய்து வருவதால் இவர்கள் பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும்.

95. சமீப காலங்களில் சுமார் 10 / 12 வருடங்களாக (அதிகமாகவும், குறைவாகவும் இருக்கலாம்) இக்காலத்திற்குரிய செய்திக்ளை, இந்தியாவில் உள்ள பல மொழிகளில் மொழிபெயர்த்து, பிரிண்ட் பண்ணி, விநியோகித்து வந்தது வில்லியம் பிரன்காம் நற்செய்தி கழகம் (William Branham Goodnews Society) இதற்கு பல கோடி மதிப்புள்ள ஒரு கட்டிடத்தை கட்டி, அதை நன்கொடையாக கொடுத்து, அதில் இந்த கழகம் இயங்க, வெளிநாட்டில் உள்ள ஒரு குடும்பத்தினர் பணஉதவி செய்தார்கள் என நினைக்கிறேன். கழகம் இயங்கிவந்தது. பல மொழிக்ளில் இக்காலத்திற்குரிய செய்திகள் கூட்டியும், குறைத்தும் மொழிபெயர்க்கப்பட்டு, விநியோகம் இலவசமாக செய்யப்பட்டது. பணிபுரியும் ஊழியர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட்டது. இந்த பணிகளை நிர்வகிக்க டாக்டர். S.C. ஜேக்கப் அவர்களுக்கு பின் போட்டியிருந்தது. கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்குள்ளும் குருப்பிசம், போட்டி, பொறாமை, ஒருவரை ஒருவர் கடிந்து பட்சித்துக் கொண்டிருந்தார்கள். இதனால் கழகம் உள்ளே அரசியல் நுழைந்தது. டாக்டர் S.C. ஜேக்கப்பிற்கு பின் கழக பணியை நிர்வகித்துக்கொண்டிருந்த சகோதரன் திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டார். சரியான காரணங்கள் கொடுக்கப்படவில்லை. பணிபுரிந்த அனைவருக்கும் பல இலட்சங்கள் நஷ்ட ஈடாக கொடுக்கப்பட்டது. கழகத்தின் பணி முடக்கப்பட்டது. ஆனால் கழகம் கலைக்கப்படவில்லை. கழகத்தின் மேல் ஆதிகத்தை எதிர்ப்பார்த்து, அரசியல் நாடகம் ஆடிய பெரவலூர் சென்னை சபை உள்ளே நுழைந்தது. பல மொழிகளில் செய்தி பிரிண்ட் செய்யப்பட்டு, முடங்கி கிடந்ததை வெளியே அனுப்பினார்கள், அனுப்பிக்கொண்டும் வருகிறார்கள். பலர் நேரில் புத்தகங்களை அள்ளி சென்றனர். கழகத்தின் சார்பாக **சென்னை சபை** செய்திகளை மொழிபெயர்த்து வெளியிட ஆரம்பித்தது. இதன் மூலமாக தங்கள் அரசியல் நாடகத்தில் வெற்றியும் பெற்றார்கள். கர்த்தருக்குரிய தசமபாகத்தை ஐந்துவகை ஊழியத்திலுள்ள ஆசாரியர்களுக்கு பகிர்ந்து கொடுக்காமல் அதை இக்காலத்திற்குரிய செய்தியை பிரிண்ட் பண்ண இந்த சபை செலவு செய்துகொண்டிருப்பதாக தெரிகிறது. இதர சபைகளையும் பணவுதவி செய்தவதற்கு நிர்பந்தப்படுத்துகிறதாகவும், ஊக்குவிக்கிறதாகவும் தெரிகிறது. சபைக்கு கர்த்தருக்குரிய தசமபாகம் மீது சபை பாஸ்டர்கள் முழு உரிமை கொண்டாடி அதை தங்கள் இஷ்டம் போல பற்பல பணிகளுக்கு செலவு செய்வதாகவும் அறிய வந்தேன். பாஸ்டர்கள் தங்கள் சுகபோக வழிகளுக்கும், தங்களுடைய பேர் பிரஸ்தாபத்திற்கும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை உபயோகப்படுத்தி கர்த்தரை கொள்ளையிடுகிறார்கள்.

96. இந்த கழகத்திற்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட பலகோடி மதிப்புள்ள கட்டத்தை அபகரிக்க **சென்னை சபை** நடத்தும் ஒரு அரசியல் நாடகமா என ஐயம் எழும்புகிறது அல்லது கட்டடத்தை விற்று அதில் கமிஷன் பணம் சம்பாதிக்கவா? அல்லது கழக கட்டிடத்தை விற்று, அதில் தங்கள் கமிஷன் போக மீதமுள்ள பணத்தை வங்கியில் போட்டு வட்டி பெற்றுக்கொண்டு அந்த வட்டியில் புத்தகம் மொழிப்பெயர்த்து வெளியிடுகிறோம் என கூறி ஒரு தொழில் நடத்தி, பணம் சம்பாதிக்கவா? **சென்னை சபை** இந்தகாரியத்தில் தன் மூக்கை கழகத்திற்குள் நுழைத்திருப்பது ஒரு பொருளாசையுள்ள பொய்யருடைய வழியும் இதுவே என சாலமோன் நீதிமொழிகளில் கூறுவதை நினைவு கூறுகிறேன். வில்லியம் பிரன்காம் நற்செய்தி கழகத்தின் பேரில் சூரியனுக்கு கீழே நடக்கிற காரியங்களையெல்லாம் கவனித்துப்பார்த்தேன் : இதோ, எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது.




97. **சென்னை சபை,** கழகத்தின் பேரில் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிபெயர்த்து சமீபத்தில் ஒரு இரு புத்தகங்களை வெளியிட்டார்கள் அதில் ஒன்று **சகேயு.** அதன் அட்டை பகுதியை இங்கு நீங்கள் காணலாம். இவர்கள் காரியங்கள் ஸ்தாபன சபைகளுக்கு

அடுத்தது போன்று தோன்றவில்லையா? இவர்கள் உங்களை எங்கே கொண்டுசெல்லுகிறார்கள் என யூகிக்க முடிகிறதா? இவர்கள் நிச்சயமாக விசுவாசிகளை ஸ்தாபன சபை பாரம்பரியங்களுக்கு கொண்டு செல்லுகிறார்கள். இந்த படம் ஆவிக்குரிய நமக்கு தேவையா? மேலும் சகேயு செய்தியின் 88 வது பத்தி இவ்வண்ணமாக கூறுகிறது. **எனவே அவன் இலைகளை பற்றி, அவையெல்லாவற்றையும் அவனை சுற்றிலும் இழுத்து, தன்னை ஒருவரும் காணக்கூடாதபடி இலைகளோடு இலையாக தன்னை மூடி மறைத்துக்கொள்கிறான் பச்சோந்தியை போல. யாருமே அவனை காண இயலாது.** அட்டை படம் 88 வது பத்தியை பிரதிபலிக்கிறதாக காணப்படுகிறதா? நிச்சயமாக இல்லை. ஏதோ கடமைக்கு ஒரு படத்தை உலகத்தாரை போன்று, ஸ்தாபன சபைகளை போன்று வெளியிட்டு மக்களை குறிப்பாக இக்காலத்திற்குரிய செய்திகளில் உள்ள மக்களை திசைதிருப்புகிறார்கள், பிலேயாமின் வேலையை செய்கிறார்கள். சபையை பக்திவிருத்தியடைய செய்வதற்கு பதிலாக, சபையை பின்னடைய செய்ய என்னென்ன செய்யலாமோ அதை **சென்னை சபை** செய்துக்கொண்டிருக்கிறது. நான் இரு குறித்து பேசியபோது தவறு நடந்து விட்டது, இனி நடக்காது என்றார்கள். அவர்கள் வார்த்தையில் மகிழ்ச்சியடைந்தேன்.

98. சென்னை சபையின் பாஸ்டரை கவனியுங்கள். இவர் தன்னை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டராக ஏற்படுத்தினார் என கூறுகிறார். நல்லது. ஆனால் இவர் பாஸ்டர் உத்தியோகத்தை செய்துக்கொண்டிருக்கிறாரா? அது அன்றுமுதல் இன்று வரை ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. பாஸ்டர் ஊழியத்திற்கும், ஊழியத்தின் பெயரில் ஊர் உலகம் சுற்றிக்கொண்டுவருவதற்கும் சம்பந்தம் ஏதும் உண்டா? பாஸ்டருக்கு ஒரு லோக்கல் சபைக்கடுத்த ஊழியம் மட்டுமே உண்டு. இந்த மந்தையில் உள்ள ஆடுகளை மேய்ப்பது மட்டுமே அவருடைய பணி. ஆனால் இவர் உலகம் சுற்றும் வாலிபனாக சுற்றித் திரிந்துக்கொண்டு, வலம் வருகிறவராகயிருக்கிறார். வலது கைக்கும் இடது கைக்கும் வீதியாசம் தெரியாத அநேக மக்கள் சபையில் உண்டு. நல்ல வேலைவாய்ப்புகளில் உள்ளவர்களும் உண்டு. அவர்களைக்கொண்டு நல்ல வருமானமும் சபையில் உண்டு. ஆதலால் தலை கால் தெரியமல் ஓடியாடிக்கொண்டிருக்கிறார். நிச்சயமாக இவர் தன் ஆதிக்கத்தில் உள்ள மக்களை நித்தியத்திற்குள் வழிநடத்தமுடியாது. ஏனென்றால் இவர் ஊழியத்தின் பாதையில் தன் ஸ்தானத்தை இன்னும் அறியவில்லை. அல்லது அறிந்தும் தன் மனம்போன போக்கில் நடக்கிறாரா? இருதயதை கடினப்படுத்துகிறாரா?

99. உதாரணமாக VOGR நிர்வாகத்தை பாருங்கள். நான் இவர்களை முற்றிலுமாக ஆதரிப்பது இல்லை. ஆனாலும் இவர்களிடம் பல நலமான காரியங்கள் உண்டு. VOGR நிர்வாக பொறுப்பு, மொழிபெயர்ப்பு இப்படிப்பட்ட காரியங்களில் எந்த ஒரு பொறுப்பையும் ஒரு சபை பாஸ்டர்களிடம் இவர்கள் ஒப்படைப்பதில்லை. பாருங்கள் சகோ பிரான்காமின் செய்திகளை மொழிபெயர்த்து வெளியிடுவது கர்த்தரால் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்பட்ட ஒரு பாஸ்டரின் ஊழியம் அல்ல. கர்த்தர் அந்த பணிகளை செய்ய பிரத்தியேகமான மனிதர்களை வைத்திருக்கிறார். பாருங்கள் அப்படிபட்ட பணிகளை செய்வது சகோ. யோவேல் மூடி பரமானத்தம், சகோ. பிரபு போன்ற தீவிர விசுவாசிகளின் பணிகளாக இருக்கிறது. **சென்னை சபை** பாஸ்டர், கழகத்தின் நிர்வாகத்தில் மூக்கை நுழைத்திருப்பது, அவர் தேவனால் அழைக்கப்பட்ட, கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்திய ஒரு பாஸ்டர் அல்ல என அவருடைய கிரியைகள் அவரை வெளிப்படுத்துகிறது. சென்னை சபையில் எனக்கு மிக்க அருமையான சகோதரர்கள் உண்டு. நான் எழுதுவது குறித்து அவர்கள் என்மீது கோபம் கொள்ளகூடாது. நான் என்ன எழுதுகிறேன் என்பதை அவர்கள் ஆவியானவருடைய ஒத்தாசையுடன் சீர்தூக்கி, சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

100. அடுத்து **சென்னை சபை** தீர்த்திரிசியின் செய்திகளை மொழிபெயர்க்கும் முறைகளும் ஒரு ஆரோக்கியமானதாக தெரியவில்லை. சமீபநாட்களில் அவர்கள் ஒரு நாகர்கோவில் வாழ் சகோதரன் செய்திகளை தங்களுக்கு மொழிப்பெயர்த்து கொடுப்பதாக கூறினார்கள். அந்த மொழிப்பெயர்ப்பாளருடைய தகுதிகள் குறித்து கேட்டேன். இந்நின்னார் எங்களுக்கு அந்த மொழிப்பெயர்ப்பாளரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். ஆனால் நாங்களோ இதுவரை மொழிப்பெயர்ப்பாளரை எங்கள் கண்களால் கண்டதில்லை என கூறினார்கள். ஆதலால் நான் அந்த மொழிப்பெயர்ப்பளரை அறிமுகப்படுத்தின சகோதரனிடம் தொடர்புக்கொண்டேன். அவரும் அந்த சகோதாரனை குறிந்த நான் பிறர் வாயிலாக அறியவந்தேனே ஒழிய இதுவரை அவரை என் கண்களால் கண்டதே இல்லை என்றார். இங்கு கவனியுங்கள் : தீர்க்கதரிசியின் செய்தியை மொழிப்பெயர்க்கும் மொழிப்பெயாப்பாளரை அறிமுகப்படுத்தியவரும் கண்களால் கண்டதில்லை, அவருடைய மொழிப்பெயர்ப்புகளை எடுத்து பயன்படுத்துபவர்களும் அவரை கண்டதில்லை. அப்படியானல் பாருங்கள் இவர்கள் மொழிப்பெயர்ப்பு ஊழியம் எவ்வாறு நடக்கிறது? யார் யாரோ செய்தியை மொழிப்பெயர்க்கவேண்டும், அது பிரசுரமாகவேண்டும். இதனால் ஒரு தொழில் நடக்கவேண்டும் என்ற எண்ணதோடுதான் **சென்னை சபை** செயல்பட்டு வருகிறது. இப்பொழுது இந்த சகோதரன் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்த்து, அதை கம்யூட்டர் பிரிண்ட் எடுத்து பலருக்கு கொடுத்துவருவதை அறிய வந்தேன். இந்த காரியம் வெளிப்பட்டது. இனி அவ்வாறு செய்ய மாட்டேன் என்று அந்த மொழிப்பெயர்ப்பாளர்

உறுதிமொழி கொடுத்துள்ளதாக என்னிடம் கூறினார்கள். கிறிஸ்துவுக்குள் எனக்கு பரிரியமானவர்களே தீர்க்கதரிசியின்செய்தியை பாழாக்க சத்துருவாகிய சாத்தானுக்கு சென்னை சபை இடம் கொடுத்துவிட்டது. இனி இவர்களது மொழிப்பெயர்ப்புகளை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். எனென்றால் ஒருவொருவரும் அவரவர்கள் மனம்போன போக்கில் கழகத்தின் பெயரில் செய்திகளை மொழிப்பெயர்த்து பிரசுரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் ஒன்று மட்டும் சென்னை சபைக்கு கூற விரும்குகிறேன் : **கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்** என்று எரேமியா 48 : 10 கூறுகிறது.

101. பாருங்கள் ஒருவனுடைய மனைவி இக்காலத்திற்குரிய செய்தியை விசுவாசிப்பது இல்லை. அவரும் விசுவாசத்திற்குள் மிக சமீபமாய் வந்தவர். ஆதலால் அவர் சபையில் டீக்கன் ஆவதற்கு கூட தகுதியற்றவர். ஏனென்றால் அவர் தன்னுடைய முழு குடும்பத்தையும் விசுவாசத்திற்குள் கீழ்ப்படிய பண்ணுகிறவனாக இருக்கவேண்டும். அவர் கனமிக்க, நீதியான, உண்மையுள்ள, உத்தமமுள்ள மனிதனாக இருக்கலாம். ஆனால் அவைகள் அந்த மனிதனை தகுதிப்படுத்தாது. இந்த நீங்கள் **டீக்கன்மார்களை நியமித்தல்** பத்தி 7, 8 தியானிக்கலாம். அவ்வண்ணமாகவே தீர்க்கதரிசிகளின் செய்திகளை மொழிப்பெயர்க்கிறவர் அவரிடத்திலுள்ள ஆவியில் ஒருமனப்பட்டவனாக இருக்கவேண்டும்.தீர்க்கதரிசியினிடத்தில் எந்த ஆவி கிரியை செய்ததோ அதே ஆவியில் பங்குடையவராக இருக்கவேண்டும். அவருடைய குடும்பத்தோடு இக்காலத்திற்குரிய செய்தியில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும். பலஆண்டுகளாக இந்த செய்தியிலிருந்து அதில் நன்கு ஊறினவனாக இருக்கவேண்டும். பாருங்கள் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்ப்பது ஒரு பெரிய காரியம் அல்ல. ஆங்கில அறிவுடைய ஒரு தமிழன் செய்திகளை மொழிபெயர்க்க முடியும். ஆனால் அது காரியம் அல்ல. யார் மொழிப்பெயர்க்கிறார்கள் என்பது தான் காரியம். அதுதான் முக்கியம். அந்த நபர் செய்தியில் நன்கு பழக்கப்பட்டவராக பக்குவமுடையவராக இருக்கவேண்டும். வேதப்பூர்வமான தகுதியில் எதையும் நான் இந்த சகோதரனிடம் காணவில்லை. திருமணமாகாத இந்த மொழிப்பெயர்ப்பாளருக்கு எனது மகளை கூட விவாகத்தில் கொடுக்க எனக்கு மிக்க நெருக்கமான ஒரு சகோதரனுடைய பரிந்துரையின் பேரில் முன் வந்தேன். ஆனால் அந்த சகோதருக்கடுத்த காரியங்களை அறிய வந்தபோது எனது மனதை / எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். ஏனென்றால் ஆவிக்குரிய காரியத்திலேயும், உலகப்பிரகாரமான காரியத்திலேயும் எனக்கு உடன்பாடு அவரிடத்தில் ஏற்படவில்லை. பாருங்கள் தாயும் மகனையும் கொண்டது இவரது குடும்பம். தாய் முற்றிலும் ஒரு அவிசுவாசி. முற்றிலுமாக உலகத்தை சார்ந்த தாயார். அவர்களுக்கு இக்காலத்திற்குரிய செய்தியில் உடன்பாடு / விசுவாசம் கிடையாது. அடுத்த இந்த சகோதரனது பாஸ்டர் ஒரு ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் / புரோக்கர். இவர் எப்படி இந்த சகோதரனை நித்தியத்திற்குள் வழிநடத்தமுடியும்? சற்று சிந்தியுங்கள். ஆக தீர்க்கதரிசியின்செய்திகளை மொழிப்பெயர்க்கும் சகோதரனை குடும்பவாழ்கையில் வழிநடத்துவது அவருடைய அவிசுவாசியாகிய தாய். ஆவிக்குரிய வாழ்க்கையில் வழிநடத்துவது ஒரு ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் / புரோக்கர். அடுத்து இவருடைய செய்தி அனுபவம் மிக குறைந்ததாக, ஒரிரு ஆண்டுகளுக்குள் எனவும் அறியவந்தேன். இதுகுறித்தும் சென்னை சபையிடம் பேசினேன். அவர்கள் என் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு அவர் மொழிப்பெயர்த்த ஒரிரு செய்திகளை மட்டுமே பிரிண்ட் செய்துள்ளோம். ஆனால் இனி அவருடைய மொழிப்பெயர்ப்புகளை நாங்கள் தவிர்ப்போம் என்று கூறினர். இந்த விஷயத்திலும் அவர்களது முடிவு எனக்கு ஒரு உற்சாகமாக இருந்தது. பாருங்கள் செய்தியின் மொழிப்பெயர்ப்பாளருடைய இன்றைய நிலையில் அவர் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்த்தால் செய்தியல் உள்ள ஜீவன், மொழிப்பெயர்ப்பில் இருக்காது. ஆனாலும் நான் இந்த சகோதரனை நேசிக்கிறேன். அவருக்கு அநேக ஆலோசனைகளையும் கொடுத்தேன். ஆனாலும் நான் கடந்தமுறை நாகர்கோவில் சென்றிருந்த போது நான் அவரை காண விரும்பியும் அவர் என்னை காணவிரும்பவில்லை. ஆனால் அதற்கு பின் மனஸ்தாபப்பட்டார்.

102. பொதுவாக அது VOGR ஆக இருந்தாலும் சரி, வில்லியம் பிரன்காம் நற்செய்தி கழகத்தின் புதிய நிர்வாகிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் மொழிப்பெயர்ப்பாளர்களுடைய பெயர்களை மொழிப்பெயர்க்கப்பட்ட புத்தகத்தில் வெளியிடுவது இல்லை. அதை மிகவும் இரகசியமாகவே வைக்க விரும்புகிறாகள். ஏனென்றால் மொழிப்பெயர்ப்பதற்கு தகுதியான விசுவாச வீரர்களை அவர்கள் தெரிந்தெடுப்பது இல்லை. எப்படியோ செய்தி மொழிப்பெயர்க்கப்பட்டு அது வெளியிடப்படவேண்டும், ஒரு சிலருக்கு அதினால் பிழைப்பு நடக்கவேண்டும் என்ற மனபக்குவத்திலே அவர்கள் இருக்கிறார்கள். யாரைக்கொண்டு எதை செய்யவேண்டும் என்பது குறித்து அவர்களுக்கு அக்கறையில்லை. புத்தக பிரிண்ட்க்காக பணவுதவி செய்கிறவர்களும் தங்கள் சபை பெயருக்காக, விளம்பரத்திற்காகவே உதவிகள் செய்கிறார்கள். ஆனால் உதவிகள் எதிலிருந்து? கர்த்தருக்குரிய தசமபாகத்திலிருந்து. இது கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொள்ளையடிப்பது தானே. பணவுதவி செய்கிறவர்கள் தங்கள் சபை பெயரை பிரசுரிக்கிறார்கள். ஆனால் அந்த செய்தியை மொழிப்பெயர்த்தது யார் என்பதை மறைக்கிறார்கள். எதை வெளியிடவேண்டுமோ எதை வெளியிடாது, எதை மறைக்கவேண்டுமோ அதை வெளியிடுகிறார்கள். கிறிஸ்து 1963 ல் பூமிக்கு வந்துவிட்டார் என உபதேசிக்கும் **சூளைமேடு** சபைக்கும், அப். யோவான் சகோ பிரன்காம்

காலில் விழுந்தான் என்ற மாறுபாடான உபதேசத்தை கொண்டுள்ள **எல்பெத்தேல் சபைக்கும்,** இக்காலத்திற்குரிய செய்திக்கும் என்ன சம்மந்தம்? இவர்கள் இந்த செய்தியில் பங்கு கொள்வதற்கு தகுதியற்றவர்கள். ஏனென்றால் இவர்கள் செய்தியை செய்தியின்படி பிரசங்கிப்பது இல்லை. கூட்டவும் குறைக்கவும் செய்கிறார்கள். இதோ இவர்கள் எல்லாரும் மாயை, இவர்கள் கிரியைகளும் விருதா.

103. அடுத்து கழகத்தின் பழைய நிர்வாகி, தன்னை **எல்பெத்தேல் சபை** சுவிசேஷகனாக நியமித்தது. என்கிறார். நல்லது . ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஒரு சுவிசேஷகனை தேவனே ஏற்படுத்தவேண்டும். எந்த ஒரு லோக்கல் சபையாலும் அதை செய்யமுடியாது. அடுத்து இவரும் வில்லியம் பிரன்காம் சுவிசேஷ கழகம் (William Branham Evangelical Society) என்று ஒன்றை ஆரம்பித்து ஜெர்மன் சகோ. கௌர்ட் செய்திகளை மொழிப்பெயர்த்து வருகிறார். இது ஒரு சுவிசேஷகனுக்கடுத்த ஊழியமா? நிச்சயமாக கிடையாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஊழியம் தேவனால் அருளப்பட்டது (கொலொ 1 : 26) எதற்கு? அவருடைய சரீரமாகிய சபையை பக்திவிருத்தியடையசெய்ய. ஒருவருடைய செய்திகளை மொழிப்பெயர்ப்பு செய்வதற்கல்ல. ஆக இவர்கள் யாவரும் தேவசித்தத்திற்கு புறம்பாகவே அவருக்கென்ற ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரையும் நான் மிகவும் நேசிக்கிறேன். இவர்கள் தவறுகளை சுட்டிக்காட்டுகிறேன். இவர்கள் செய்கைகளை கடிந்துக்கொள்கிறேன். அதை செய்யாமல் என்னால் இருக்கமுடியாது. அது தான் நான் அவர்கள் மீது வைத்திருக்கும் அன்பு.

104. முடிவில், இவ்வாறாக தேவனுடைய நியமத்திற்கு விரோதமாக, தேவன் ஏற்படுத்தாவிட்டாலும் தேவன் ஏற்படுத்தினார் எனக்கூறி மக்களை ஏமாற்றும், வஞ்சிக்கும் கூட்டத்தார் அனைவரையும் தேவன் தம்முடைய ஜீவபுத்தகத்திலிருந்து நீக்கிப்போடுவோர். ஆதலால் இவர்கள் மனந்திரும்பி தங்களை சரிப்படுத்திக்கொண்டால், கோணலான வழிகளை தேடாமல் நேர் பாதைக்கு வந்தால் அவர்கள் ஆத்துமாவிற்கு அது நலமாக இருக்கும்.

105. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என மாற்கு 16 : 16 ல் வாசிக்கிறோம். இதனால் நாம் சிறுகுழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. அது கிறிஸ்து தன் பாவங்களுக்காக பாடுபட்டார், மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என விசுவாசிக்கமுடியாது. (1 கொரி 15 : 1-4, ரோ 6: 3-5) நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப் 2 : 38) எதற்கு? ஒருவன் தான் செய்த பாவங்களுக்கு, அக்கிரமங்களுக்கு, மீறுதலுக்களுக்கு. பாருங்கள் தான் செய்த பாவங்களுக்கு. தான் இனி செய்யப்போகிற பாவங்களுக்கு அல்ல. ஒரு குழந்தை பாவத்தில் பிறந்தது உண்மைதான். இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங் 51 : 5) ஆனால் ஒரு குழந்தையினிடத்தில் பாவம் இல்லை. **பாவம் என்பது என்ன?** விசுவாசத்தினாலே வராத யாவும் பாவம் (ரோ 14 : 23) **விசுவாசம் எதன்மேல்?** தேவனுடைய வார்த்தையின் மேல். ஒரு குழந்தைக்கு எது சரி, எது தவறு என்று தெரியாது. அதற்கு நன்மை, தீமை எது என்று தெரியாது. அது மனந்திரும்பி தேவனோடு ஒரு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்துக்கொள்ளமுடியாது (1 பேதுரு 3 : 21) அது ஒன்றை விசுவாசிக்கக்கூடிய மனநிலையில் இல்லை. ஒரு குழத்தை இயேசு தன் பாவங்களுக்காக பாடுப்பட்டு, மரித்து, அடக்கப்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கக்கூடிய மனபக்குவத்தில் இல்லை. ஆதலால் நிச்சயமாக ஒரு குழந்தை கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரமாக நடந்துக்கொள்ள முடியாது (பிலி 1 : 29) ஒரு குழந்தை திருவசனமாகிய கலங்கமில்லாத ஞானபாலாக இருக்கிறது (1 பேதுரு 2 : 2, 3) முடிவாக ஒரு குழந்தைக்கு பாவத்தை பற்றி எதுவுமே தெரியாது. அது மனந்திருப்பவும் முடியாது. ஆதலால் அதற்கு ஞானஸ்நானம் கொடுப்பது அறிவீனம். இவ்வாறாக குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும், சத்தியத்தை அறியும் அறிவடையாத யாவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும். இவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பூரணமாக ஏற்றுக்கொள்ள, பிரசங்கிக்க தவறிவிட்டார்கள்.

106. பாருங்கள் ஒருவன் தன்னை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் பாஸ்டராக ஏற்படுத்தப்பட்டவன், தேவனை அறிந்திருக்கிறவன், இக்காலத்திற்குரிய செய்தியை அறிந்திருக்கிறவன் எனக்கூறிக்கொண்டு, மாய்மாலம்பண்ணி தன் பிள்ளைகளை தண்ணீரில்லாத கிணறுகளாகிய ஸ்தாபன சபை விசுவாசிகளுக்கு விவாகத்தில் கொடுப்பவனாகில் அவன் தன் கிரியைகளில் ஆண்டவரை மறுதலிக்கிறவனாக இருக்கிறான்.கிரியை இல்லாத அவனது விசுவாசம் செத்ததாக இருக்கிறது (யாக் 2 : 20) அவனுடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து நீக்கப்படும். ஏனென்றால் அவன் அருவருக்கப்படத்தக்கன், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதவன் என தீத் 1 : 16 கூறுகிறது. பாருங்கள் அந்நிய நுகத்தினலே அவிசவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக : அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது என 2 கொரி 6 : 14-18 வசனங்கள் கூறுகிறது.

107. மயிரைப்பிண்ணி பொன்னாபரணங்களை அணிந்து, தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையை சிங்காரித்துக் கொண்டு, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி, தன்னை புறம்பாக அலங்கரிக்கும் யேசபேல்கள், (2இரா 9: 30) தங்கள் கணவனை ஆண்டவன் என அழைத்து அவனுக்கு கீழ்ப்படியாத, கீழ்ப்படியாமையின் பெண்கள் (1பேதுரு 3 : 3 - 6) யாவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும்.

108. தன்னுடைய மனைவியை தன் சரீரமாக பாவித்து அவளிடத்தில் அன்பு கூர்ந்து அவளை நேசிக்காது, அவளுக்கு இணையாக மற்றொரிடத்தில் வேறொரு பெண்ணுடன் குடும்பம் நடத்தும் தீயவர்கள், தங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று அழைத்துக்கொண்டாலும், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று கூறினாலும் அவர்கள் பெயர்கள் யாவும் ஜீவபுத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

109. ஏழாம் சபை காலத்தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காமை **கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து** என அறிக்கை செய்து, உபதேசித்து **நானும் என் வீட்டாரும் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம்** என அறிக்கையிட்டு இருதயத்தில் விசுவாசிக்கும் அனைவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து நீங்கப்படும். இது பக்கா பிசாசின் கூட்டம்.

110. ஒருவன் சில ஆத்துமாக்களை தனக்கென்று ஆதாயப்படுத்தி தன்னை தானே பாஸ்டராக்கிக்கொண்டு, சில பேரைக்கொண்டு ஒரு சபையை நிறுவி, தான் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவன் என கூறிக்கொண்டு கர்த்தருக்குரிய தசமபாகங்களையும், சபைகடுத்தகாணிக்கைகளையும், தான் ஆதாயப்படுத்திய மக்களிடமிருந்து பெற்று, தன் தொழில் மற்றும் உத்தியோத்தில் கிடைக்கும் வருமானத்துடன் இதை தனக்கு பக்க வருமானமாக்கிக்கொண்டு ஊழியம் செய்யும் கள்ளகபடமுள்ள வேளையாட்கள் யாவருடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். End time massage, End time massage என கூறுகிறார்கள், கர்த்தரால் அவருடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய பாஸ்டராக பணிபரிகிறேன், கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன் என்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய மந்தையை மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனபூர்மாகவும், அவலட்சனமான ஆதாயத்துக்காக அல்ல, உற்சாக மனதோடு, சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்காக அல்ல, மந்தைக்கு மாதிரியாக (1 பேதுரு 5 : 2, 3) ஊழியம் செய்யவேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஊழியக்காரன் நம் மத்தியில் உண்டா? இது என்னிடம் பலர் கேட்க்கும் கேள்வி. என்னால் சரியான பதில் கொடுக்கமுடியவில்லை.

111. கர்த்தரால் ஏற்படுத்தப்படாது, சில வெளிநாடு ஊழியர்களை சார்ந்துக்கொண்டு, அவர்களிடம் உதவிகள் பெற்று, அவர்களுடைய உபதேசங்களை மக்களுக்கு போதித்து மாய்மாலம் பண்ணும் மக்களை வஞ்சிக்கும் ஊழியக்காரர்கள் பெயர்களும் ஜீவபுத்தகத்தலிருந்து அகற்றப்படும். பாருங்கள் சகோ. டால்டன் புருஸ் ஐ சார்ந்தவர்கள், ஆவிக்குரிய மரணம் அடைந்துவிட்டார்கள்.

112. வெளி 19 : 10 மற்றும் 22 : 8 ல் கூறப்பட்டுள்ள சம்பவம் குறித்து : அப் யோவான், சகோ பிரன்காம் காலில் தான் விழுந்தான். அப்பொழுது சகோ பிரன்காம் தியாபெனி சரீரத்தில் இருந்தார் என உபதேசித்து, இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்கள் மத்தியில் துர்உபதேசங்களை கொண்டுவந்து, அவர் விசுவாசத்தை புரட்டும் கள்ளகபடமுள்ள வேளையட்கள் யாவருடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து நீக்கப்படும். இதுகுறித்து மேலும் அறிய **இயேசுவே வாரும்** இதழ் ஜனவரி / ஏப்ரல் 2004 - ஐ பெற்று தியானியுங்கள்.

113. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை பிரசங்கியாது (1 பேதுரு 1 : 12) ஆவியோடும் கருத்தோடும் பாடல்கள் பாடாது, ஆவியோடும் கருத்தோடும் விண்ணப்பங்கள் செய்யாது (1கொரி 14 : 14, 15) பிரசங்க மேடைகளில் இளம்வாலிப பெண்களை பாடவைத்து, ஆடவைத்து, நடனமாடவைத்து மக்களை கவர்ச்சி செய்யும் கவர்ச்சி நாயகன்கள் அனைவருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும். இவர்கள் சினிமாவில் சேர்ந்து நடிக்கவேண்டியவர்கள். திருவசனம், தேவனுடைய நாமம் துஷிக்கப்படும்படிக்கு இவர்களுடைய நடத்தை தேவனுக்கு விரோதமாக இருப்பதால் இவர்கள் பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும்.

114. 1963 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி சூரியன் அஸ்தமிக்கும் நேரத்திற்கு சற்று முன்பாக அமெரிக்கா, அரிசோனாவிற்கு மேலே ஆகாயத்தில் காணப்பட்ட இந்த மேகம், சகோ பிரன்காம் ஊழியத்தில் தோன்றியது. இதற்கு முன் ஏழு தேவதூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்து அவரை சந்தித்தார்கள். பின் அவர்கள் மேகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த மேகம் உருவாகிறது. இது குறித்து அவர் 1962 ம் ஆண்டு டிசம்பர் 22 ம் தேதி ஒரு தரிசனம் கண்டு, அதன் நிறைவேறுதலாக இது இருந்தது. இதை கர்த்தருடைய



வருகை, இது வெளி 8 : 1 ல் கூறப்பட்டுள்ள அரைமணிநேர அமைதலாகும், வெளி 10 : 1 ல் கூறப்பட்டுள்ள பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்ததன் தோற்றம் எனவும், இயேசு கிறிஸ்து தம்முடைய ஜனங்கள் மத்தியில் வந்து தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்வதற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார் என பற்பல வேற்றுமையான உபதேசங்களை கொண்டு விசுவாசிகளின் விசுவாசத்தை சீர்குலைத்துப்போடும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள் யாவருடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து எடுத்துப் போடப்படும். இது குறித்து ஒரு செய்தி தொகுப்பை **ஏழாம் முத்திரை** என்ற தலைப்பில் மே - ஆகஸ்ட் 2005 ல் எழுதியுள்ளேன் உங்களுக்கு தேவைப்படுமானால் என்னுடன் தொடர்புக்கொண்டு அதன் நகலை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

115. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும், மகத்துவத்தை தூஷிக்கும் துணிகரக்காரர்களாகிய யேகோவா சாட்சி சபையினருடைய பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும்.

116. தன்னை ஐந்து வகை ஊழியத்தில் ஒரு பாஸ்டராக அழைத்துக்கொண்டு, அதேவேளையில் தன்னை இன்டர்நேஷனல் பிரசங்கி என்றும், அப்போஸ்தலன் என்றும், சுவிசேஷகன் என்றும் பிரகடனப்படுத்தும், நீதியின் வசனங்களில் பழக்கமில்லாத இவர்களுடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து அகற்றப்படும்.

117. தேவனுடைய வசனம் தூஷிக்கப்படும்படிக்கு, வீட்டிலே தரித்திராது பொது ஸ்தலங்களில் நாள் முழுவதும் தரித்திருக்கும் , இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைக்கொண்ட, நிலையற்ற ஐஸ்வரியத்தின் மேல் நம்பிக்கைக் கொண்டுள்ள பாலிய ஸ்திரீகள் அனைவர்களுடைய பெயரும் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும். (தீத் 2 : 5, சங் 68 : 12, 13)

118. இவ்வாறாக நான் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கப்படும் அநேகருடைய காரியங்களை குறித்து எழுதிக்கொண்டே போகலாம். ஆனாலும் திருஷ்டாந்தமாக எழுதப்பட்டுள்ள இந்த சில காரியங்கள் உங்கள் சிந்தனைக்கு போதும் என எண்ணுகிறேன். நம் மத்தியிலுள்ள பெரும்பாலான ஊழியர்கள் இந்த உலகத்திற்கு மரிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்படவில்லை. இவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய் பிடித்து, பொருளாசையில் பழகிய இருதயத்தையுடைய சாத்தானின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். நீ எப்படியிருந்தாலும் சரி, என் சபைக்கு வா, கர்த்தருக்குரிய தசமபாகத்தை எனக்கு கொடு, சபைக்கடுத்த காணிக்கைகளையும் எனக்கு கொடு அது எனக்கு போதும்.நான் உங்கள் மனவிருப்பப்படி நடந்துக்கொள்கிறேன், உங்களுக்கு ஏற்றப்படி உபதேசம் பண்ணுகிறேன் என்கிறார்கள். இவர்கள் செம்மையான வழியைவிட்டு வழிதப்பி நடத்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழிகளை பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள். தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். தங்களுடைய அக்கிரமத்தினிமித்தம் இவர்கள் எவ்வளவுதான் கடிந்துக்கொள்ளப்பட்டாலும் தங்கள் வழியை விட்டு இவர்கள் திருந்தவே மாட்டார்கள். ஆதலால் இவர்கள் பெயர்களும் ஜீவபுத்தகத்திலிருந்து நீக்கப்படுகின்றன.

119. என் ஜனங்களே ஜீவபுத்தகத்திலிருந்து பெயர்கள் அகற்றப்படபோகும் சில வகையராக்களை குறித்து உங்களுக்கு வேதவாக்கியங்களின் அடிப்படையில், ஆவியனாவருடைய வழிநடத்துதலின் படி எழுதினேன். ஏனென்றால் தேவனுடைய வார்த்தையே நம்மை நியாயந்தீர்க்கப்போகிறதாக இருக்கிறது. ஆதலால் மேற்கூறியவர்களுடைய பாவங்களுக்கு உடன்படாமல் அவர்களுக்கு நேரிடப்போகும் வாதைகளில் நீங்களும் அகப்படமால் இருக்கும்படிக்கு அவர்களை விட்டு விலகி உங்களை காத்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களுடனே கூட போகிறதாயிருக்கிறது.

120. முடிவாக ஒருவன் இந்த உலகத்திற்கு மரிக்கவேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக சாத்தானால் இயக்கப்பட்டு வழிநடத்தப்பட்டுவரும் ஸ்தாபனசபைகளின் கோட்பாடுகளுக்கு நீங்கள்மரிக்கவேண்டும். அதாவது உங்களுடைய முதல் கணவனாகிய இந்த உலக சுபாவத்திற்கும், ஸ்தாபன சபை கோட்பாடுகளுக்கும் நீங்கள் மரிக்கவேண்டும். பின் கிறிஸ்து என்னும் வேறொருவருடையராவதற்கு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டும். அதாவது நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் (யோ 3 : 5 : 7) மாம்சத்தில் பிறந்தது மாம்சமாயிருக்கிறது. இப்பொழுது ஆவியில் பிறப்பது ஆவியாயிருக்கிறது (யோ 3 : 6)

121. நீங்கள் வேறொரு சுபாவத்துடன் இணைப்படவேண்டும். அதாவது முந்திய சுபாவம் மரித்து அதிலிருந்து விடுதலையாகி, மற்றொரு புதிய சுபாவத்துடன் இணைக்கப்படவேண்டும். நீங்கள் கலப்பட பிறவியாகயிருக்கமுடியாது. ஒருவன் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மனந்திரும்பி, தன் பாவமன்னிப்புக்கென்று, தான் தன் பழைய சுபாவத்தில் செய்த பாவங்களின் மன்னிப்புகென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது அவன் தன் உலக சுபாவத்திற்கு மரித்து, அடக்கம்பண்ணபட்டு, உயிர்த்தெழுந்து ஒரு புதிய ஆவிக்குரிய இணைப்புக்குள் வருகிறான் (ரோ 6 : 1-5, கொலொ 2 : 12) **இது பழைய ஜீவியத்தின் அடக்கம், புது ஜீவியத்தின் தொடக்கம். இது முதலாம் மனிதனின் மரணம். இரண்டாம் புருஷனாகிய கிறிஸ்துவோடு செய்யும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை.** நீங்கள் புதிய மனுஷனை தரித்துக்கொண்டபிறகு இங்கு பழைய மனுஷனுக்கு இடமே கிடையாது .இருக்கவும் கூடாது. இது முந்தின நடக்கைக்குரிய மோசம் போகும் இச்சையினாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை களைந்துப்போட்டு உள்ளத்திலே புதிய ஆவியுள்ளவர்களாகி, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்வதாகும் (எபே 4 : 22 - 24) அதாவது பழைய மாம்சத்தின் கிரியைகளுக்கு மரித்து, மெய்யான திராட்சை செடியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் கொடியாக நிலைத்திருந்து கனிக்கொடுப்பதாகும்.

122. இந்த புதிய இணைப்புக்குள் வரும்போது நீங்கள் மரித்தேரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகிறீர்கள். கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவராகிறீர்கள். இப்பொழுது உங்களின் நியாயப்பிரமாண இல்லாமல் தேவ நீதி செயல்படுகிறது (ரோ 3 : 21) இப்பொழுது நீங்கள் உலகத்துக்குரியவர்கள் அல்ல (யோ 17 : 16) இந்த உலகம் உங்களுக்கு பாத்திரமாக இருக்காது (எபி 11 : 38) உலகம் உங்களை அறியவும் அறியாது (யோ 1 : 10, 1 யோ 3 : 1).

123. நீங்கள் உண்மையாகவே உங்கள் பாவங்களுக்கு மரித்து, அடக்கம்பண்ணபட்டு, உயிர்த்தெழுந்தால் மரித்தேரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களானீர்கள். கிறிஸ்து சிலுவையில் நமக்கென்று சாபமாகி, நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டார். இவ்வாறாக கிறிஸ்து சிலுவையின் மூலமாய் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (கலா 3 : 13, ரோ 10 : 4, 2கொரி 5 : 21, கொலோ 2 : 14) நீங்கள் இந்த உலக சுபாவத்திற்கு ஸ்தாபன சபைகளின் கோட்பாடுகளுக்கு மரிக்கவில்லையானால் கிறிஸ்து என்கிற வேறொருபுருஷனுக்கு உரியவர்கள் அல்ல. உங்கள் முதல் புருஷனுக்கு நீங்கள் இன்னும் மரிக்கவில்லை. இந்நிலையில் நீங்கள் கிறிஸ்துவினிடம் உரிமை கொண்டாட முடியாது. உரிமை கொண்டாடுவீர்களானால் நீங்கள் ஆவிக்குரிய விபசாரம் செய்கிறீர்கள். அப்படியானால் நீங்களே அந்த விபசாரமும், பாவமும், மாறுபாடுள்ள சந்ததி.

124. ஒரு புறாவையும், காகத்தையும் கவனித்துப்பாருங்கள். காகம் நாள் முழுவதும் கோதுமையை சாப்பிட முடியும். அதேவேளையில் அங்கிருந்து பறந்து சென்று ஒரு செத்த பிணத்தையும் புசிக்க முடியும். ஆனால் புறா நாள் முழுவதும் கோதுமையை மாத்திரமே சாப்பிடமுடியும். செத்த பிணத்தை அதினால் சாப்பிடமுடியாது. சாப்பிட்டால் அது அந்த புறாவை கொன்றுவிடும். அவ்வண்ணமாகவே ஒரு மறுபிறப்பு அடைந்த கிறிஸ்தவனின் நிலையிருக்கிறது. இந்த உலக சுவாபம், ஸ்தாபன சபைகளின் கோட்பாடுகள் அவனுக்கு செத்ததாகவும், துர்நாற்றம் உள்ளதாகவும் இருக்கும். அவன் தேவனுடைய வார்த்தையை மட்டுமே புசிப்பான். நீங்கள் ஒரு காகமா, புறாவா என்று உங்களை நீங்களே நிதானித்துப்பாருங்கள். பிரியமானவர்களே இவைகள் யாவற்றையும் உங்கள் பக்திவிருத்திக்காக எழுதியுள்ளேன். நிச்சயமாக நான் சத்தியத்திற்கு விரோதமாக ஒன்றும் எழுதவில்லை என்ற நிச்சயத்தை உடையவனாயிருக்கிறேன். இச்செய்தி தேவனுக்கும் ஒரு மனிதனுக்கும் இடையில் ஆவிக்குரிய தொடர்பை உண்டாக்கி, அதன் காரணமாக அவன் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகி, பரிசுத்த ஆவியினால் நிறைந்து தேவனுடைய வார்த்தையின் படி ஜீவித்தால் நான் திருப்தியடைகிறவனாயிருப்பேன்.

125. உண்மையான அன்பு பிழைகளை திருத்த முயலும் என்பதை நினைவுகூறுங்கள். உங்கள் பிழைகள் திருத்தப்படும் போது நீங்கள் அதை நல்ல முறையில் ஏற்றக்கொள்ள வேண்டும். ஆதலால் உங்களுக்கு இது சிந்திக்கும் காலம், செயல்படும் நேரம், ஆதலால் மௌனமாயிருதேயுங்கள். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம் அனைவரோடும் கூட என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் இருப்பதாக. ஆமென்

நவம்பர் / டிசம்பர் 2010

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**

# *தேவனுடைய சிந்தையில் உள்ள, அவர் அறிந்திருக்கிற அந்த சரீரம் யார்? எங்கே?*

1. கிறிஸ்துவுக்குள் எங்களுக்குப் பிரியமானவர்களே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் வாழ்த்துக்கள். உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.

2. 03.11.1985ல் பிறந்து, B.P.T. (Bachelor of Physiotherapy) முடித்து, Internship செய்து வரும், 155 Cm உயரமுள்ள, நல்ல நிறம் கொண்ட அழகிய ரூபவதியாகிய எங்கள் பெண் **லவ்லின் எஸ்தர்** : பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்ற, கிறிஸ்துவுக்குள்ளாக ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்த, தேவனுக்கென்று அனலாயிருக்கும் எந்த சரீரத்தின் பாகமாக இருக்கிறாளோ ; தேவன் தீர்மானித்து அவருடைய சிந்தையில் உள்ள அந்த சரீரத்தை கண்டடையவும், நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக்கொள்ள உடன் பங்காளியாகிய அவளை, அந்த சரீரத்துடன் இணைக்கப்போகும் மனமகிழ்ச்சியின் நாளை காணவும், தேவன் எங்களுக்கு ஒரு வழியை உண்டாக்குவார் என்ற நம்பிக்கையில் பிரயாசப்பட்டு வருகிறோம்.

3. நாங்கள் குடும்பமாக, தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரே தேவன் உண்டு (யாத் 20 : 2,3 : மாற் 12 : 29, யாக் 2 : 19, ரோ 3: 29) அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பழைய ஏற்பாட்டின் யேகோவா, புதிய ஏற்பாட்டின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என விசுவாசிக்கிறோம். ஒரே ஞானஸ்நானம், அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் (மத் 28 : 19, அப் 10 :43, 4 : 12, 2 :38) என்பதில் உறுதியாக இருக்கிறோம். நாங்கள் குடும்பமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம். எங்கள் பெண்கள் பொன்னாபரணங்களினால் தங்களை அலங்கரிப்பது இல்லை. (1பேதுரு 3 : 3) ஆனால் நாம் தேவனை பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கைக்கு வெளிபுற அடையாளமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பது போன்று, ஒரு ஆண் - பெண் தங்களின் திருமண வேளையில் செய்யும் உடன்படிக்கைக்கு வெளிபுற அடையாளமாக அவர்கள் தங்கள் சமுதாய முறைப்படி ஒரு அடையாள சின்னத்தை அதாவது தாலியை ஆண் பெண்ணுக்கு அணிவிக்கிறான் (லூக் 15 : 8-10) மேலும் தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு எங்கள் பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவளாக காணப்படுகிறார்கள். (தீத் 2 :5, எபே 5 : 29) அவர்கள் தங்கள் தலை மயிரை நீளமாக வளர்த்து, அதுவே தங்கள் தலை முக்காடு (1 கொரி 11 : 15) என்ற உபசேதத்தில் கட்டப்பட்டிருக்கிறார்கள். மேலும் விக்கிரகங்களுக்கு அணிந்து அலங்கரிக்கும் பூமாலைகளை ஆபிரகாமின் குமாரனும் குமாரத்திகளும் தங்கள் திருமண வேளையில் அணிந்து, அஞ்ஞான மார்க்க ஆசாரங்களை ஆசரிப்பது இல்லை. அந்த அலங்கரிப்பு யெசபேலுக்கு அடுத்த காரியமாக இருக்கிறது. (2 இரா 9:30) நாங்கள் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே பெண்களுக்கு அலங்கரிப்பு, அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (1 பேதுரு 3 : 4) என நம்புகிறோம்.

4. சூரிய தேவனின் (Sun of God) பண்டிகையை ரோம அஞ்ஞானமக்கள் டிசம்பர் 21-ம் தேதி கொண்டாடிவந்தனர். பின் அது டிசம்பர் - 25 ம் தேதிக்கு மாற்றப்பட்டு தேவகுமாரன் (Son of God) பிறந்தநாள் பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகிறது. அப்படியே பிரதி ஆண்டு மார்ச் மாதம் 21-ந் தேதி அல்லது அதற்கு பிறகு வரும் முதல் பௌணர்மிக்கு பிறகு வரும் முதல் ஞாயிறு ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட பண்டிகைகளை ஆடிப்பாடி களியாட்டுக்காகவும், புசிப்பதற்கும், குடிப்பதற்கும், உடுப்பதற்கும் பண்டிகை நாட்களாக நாங்கள் ஆசரிப்பது இல்லை. ஒருவன் கிறிஸ்துவோடு கூட பாடுப்பட்டு, ஞானஸ்நானத்தில் அவருடன் கூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துடன் தேவனுயைட சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறானா என்பதே காரியம்.

5. இந்த நாட்டின் கலாச்சார நடைமுறைப்படி நாங்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் நாடார் குலத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். நாங்கள் ஏதோ ஒரு புதிரான குடும்பம் என்று நீங்கள் எண்ண வேண்டாம். எங்கள் இருதயத்தில் தேவனுடைய வார்த்தையாகிய வித்து விதைக்கப்பட்டு, அது முளைத்து, வளர்ந்து, மரமாகி கனிக்கொடுத்துக்கொண்டிருப்பதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அந்த கனியில் பங்கு கொள்ள உங்களுக்கு விருப்பமா?

6. நாங்கள் கண்டடைய ஆவலாய் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் எங்கள் மகளது சரீரம் உங்கள் இல்லத்தில் இருக்கிறது என்று நீங்கள் முழு நிச்சயமாக நம்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

7. கிருபையானது உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**